விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 12 வெள்ளிக்கிழமை (25.03.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 96



ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT


## —அரச கட்டுப்பாட்டுப் பகுதியில்—

# கருணாவின் முகாம்கள் இல்லை என்பதை உறுதிப்படுத்துமாறு அரசிடம் கோரிக்கை

## புளியங்குளத்தில் பஸ் தடம்புரண்டது நடத்துநர் பலி; 15 பேர் படுகாயம்

(கிளிநொச்சி)

புளியங்குளத்திலிருந்து முல்லைத்தீவுக்குச் சென்ற தமிழீழ போக்குவரத்துக் கழக பஸ் ஒன்று புளியங்குளம் பகுதியில் தடம்புரண்டதில் ஒருவர் பலியானார். 15 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இச் சம்பவம் நேற்று மாலை 3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தின்போது பஸ்ஸின் நடத்துநர் ஸ்தலத்தில் உயிரிழந்தார்.

கால்நடை ஒன்றிற்கு இடம் கொடுக்க முற்பட்டபோது பஸ் (12 ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய சமாதானப் பேரவை அறிக்கை மூலம் வேண்டுகோள்

(நமது நிருபர்)

பொலநறுவை தீவுச்சேனைப் பகுதியில் கருணா குழுவின் முகாம்கள் எதுவும் இல்லையென உறுதிப்படுத்துமாறும் கருணா தரப்பிற்கு ஆதரவு வழங்குவது என்ற குற்றச்சாட்டுக்களை உடனடியாக மறுக்குமாறும் அரசாங்கத்தை தேசிய சமாதானப் பேரவை கேட்டுள்ளது.

தேசிய சமாதானப் பேரவை நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இது குறிப்பிடப்பட்டுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பை உருவாக்க ஆசிய அபிவிருத்தி வங்கி உதவுமாம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மீள்கட்டமைப்புக்காக ஒன்றிணைந்த பொதுக் கட்டமைப்பு ஒன்றை அமைப்பதற்கு தாம் தேவையான எந்தவொரு உதவியையும் வழங்க தயாராகவிருப்பதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் உப தலைவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் மிக விரைவில் மீள்கட்டமைப்புப் பணிகளை ஆரம்பிக்குமாயின் அது உதவி வழங்கும் நாடுகளின் நம்பிக்கையை உறுதிப்படுத்துவதாக அமையும் என்றார்.

கட்டமைப்புப் பணிகளை வெளிப்படையாக மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் உதவி வழங்கும் நாடுகளுக்கு அரசு மீதும் நம்பிக்கை ஏற்படும் என்றார்.

சர்வதேச ஆதரவுடன் பொதுக் கட்டமைப்பை அமைப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆதரவு கிடைக்கும். இந்தக் கட்டமைப்பு ஏற்படுவதன் மூலம் வடக்குக் கிழக்கு புனரமைப்புகளை மேற்கொள்வதற்கு தீர்வாக அமையும்.

இது குறித்து ஆசிய அபிவிருத்தி வங்கி சிறந்த எண்ணத்துடன் உள்ளது என்றார். (ச-8)

## யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் நேற்று வேலை நிறுத்தத்தில் குதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் நேற்று பிற்பகல் 1.30 மணியிலிருந்து தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பணமோசடி குற்றச்சாட்டு உடபட்ட உயர் அதிகாரியின் மீதான ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பாக ஊழியர் சங்கம் துணைவேந்தருடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகள் பயனளிக்காத நிலையில் தாம் தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதென முடிவுசெய்துள்ளதாக ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்பு மற்றும் நீர் விநியோக கடமைகளில் ஈடுபடும் அங்கத்தவர்கள் இதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர்.

பரீட்சைப் பணிகளில் ஈடுபடும் அங்கத்தவர்கள் பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவரின் முன் அனுமதியைப் பெற்று கடமையில் ஈடுபடுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ச)

## பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைதான தமிழ் இளைஞன் செவ்வாயன்று விடுதலை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்கொலை படை வீரர் என்ற சந்தேகத்தின் பேரில் பயங்கரவாதச் தடைச் சட்டத்தின் கீழ் கொழும்பில் 2001 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர் ஒருவரை விடுதலை செய்யுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் கடந்த செவ்வாய்க் கிழமை உத்தரவிட்டுள்ளது.

ஜோன் எப்மன் பீற்றர் மரிய சீலன் (வயது 35) என்பவரே கொழும்பு மேல் நீதிமன்றத்தால் நிரபராதி என விடுவிக்கப்பட்டவர் ஆவார்.

இவர் மீதான வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ முன்னிலையில் இடம்பெற்று தீர்ப்பு கடந்த செவ்வாய்க் கிழமை அறிவிக்கப்பட்டது.

பொலிஸாரால் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் குற்றஞ் சாட்டப்பட்டிருப்பவரால் சுயமாக வழங்கப்பட்டது என்பதை அரச தரப்பினர் நிரூபிக்கத் தவறியதால் (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரச கணக்கில் 150 கோடி ரூபாவை உலக வங்கி வைப்புச் செய்துள்ளது

சுனாமி ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இலங்கையை மீளக்கட்டியெழுப்ப உலக வங்கி 150 கோடி ரூபாவை வழங்கியுள்ளதாக திறைசேரி செயலாளர் பி.பீ.ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இலங்கையை மீண்டும் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளுக்காக உலக வங்கி 150 கோடி ரூபாவை அரசின் கணக்கில் கடந்த 22 ஆம் திகதி அனுப்பியிருப்பதாக பி.பீ. ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு உதவி வழங்குவதாக உறுதியளித்த ஏனைய வெளிநாட்டு அரசாங்கங்களும் தனியார் அமைப்புக்களும் தாங்கள் உறுதியளித்த தொகையை இம்மாத இறுதிக்குள் வழங்கும் என தான் எதிர்பார்ப்பதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

சுனாமி ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தமது வியாபாரங்களை மீண்டும் கட்டியெழுப்ப கடன் கேட்டு விண்ணப்பித்திருந்த வியாபாரிகளுக்கு அவர்களின் வியாபார நடவடிக்கைகளை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி என்பன சுசஹன கடன் திட்டத்தின் கீழ் இதுவரை 100 கோடி ரூபாவை வழங்கியுள்ளன என்றும், அத்துடன் மேலும் 500 கோடி ரூபாவிற்கான கடன்கோரும் விண்ணப்பங்கள் ஆராயப்பட்டு வருவதாகவும் திறைசேரி செயலர்ளர் தெரிவித்துள்ளார். (ச-8)

## முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் மூவர் கட்சியிலிருந்து நீக்கம்

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து அரசுடன் இணைந்து கொண்ட மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அக்கட்சியிலிருந்து தலைமைப் பீடம் நீக்கவுள்ளது. கட்சிக்கு அவதூறு ஏற்படுத்தியதாகக் கருதி மூவரும் பதவி நீக்கம் செய்யப்படவுள்ளனர். ரிசாட் பதியுதீன், நஜீப் ஏ மஜீத், அமீர் அலி ஆகியோர் முஸ்லிம் காங்கிரஸிலிருந்து நீக்கப்படவுள்ளனர்.

இம் மூவர் மீது குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் அதி உயர்பீடம் இம் முடிவை எடுத்ததாக கட்சியின் செயலாளர் நாயகம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே அதிகாரிகள் திருமலை விஜயம்

நோர்வே தூதரகத்தின் அதிகாரிகள் குழுவினர் நேற்றுக் காலை 10.00 மணிக்கு திருகோணமலைக்கு விஜயம் செய்தனர்.

இக் குழுவினர் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் திருகோணமலை அலுவலகத்திற்குச் சென்று அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் பற்றியும் ஆராய்ந்துள்ளனர். இதனைத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதமிருந்த தேரர் நேற்று அதனைக் கைவிட்டார்

(திருமலை)

திருகோணமலையில் கடந்த நான்கு நாட்களாக சாகும்வரையில் உண்ணாவிரதம் மேற்கொண்டுவந்த ஹந்தன் ஹமுக நந்தசேன தேரர் உண்ணாவிரதத்தினைக் கைவிட்டுள்ளார்.

திருகோணமலை அரசாங்க அதிபர் வழங்கிய வாக்குறுதியை அடுத்தே நேற்றுப பிற்பகல் தேரர் தனது உண்ணாவிரதத்தை நிறுத்திக் கொண்டார்.

இதேவேளை, உண்ணாவிரதத்தினை முடித்துக்கொண்ட தேரரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முற்பட்டவேளையில் அங்கு கூடிய மக்கள் அரசாங்க அதிபரிடம் எழுத்துமூலம் உறுதிமொழி வழங்குமாறு கோரி கோஷமிட்டனர். (12 ஆம் பக்கம் பார்க்க)


EXPOAIR யாழ் கொழும்பு எக்ஸ்போ ஏயார்

தினசரி விமான சேவை

T.P: 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999

Your friend in the skies... E-Mail: jaffna @ expoavi.com, reservations @ expoavi. com,

வானத்தில் உங்கள் நண்பன்...

# வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதி
# ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திரசுவாமி ஆலய
# இரதோற்சவ சிறப்பிதழ் - 25.03.2005

## சங்கரத்தை பிட்டியம்பதி பத்திரகாளியம்மை ஆலயத்தின் வரலாறும், சிறப்புக்களும், வழிபாட்டுமுறைகளும்

யாழ்ப்பாணத்தின் வலிமேற்கு பிரதேசத்தில் அமைந்திருக்கும் அழகிய சிற்றூரான சங்கரத்தையின் மேற்கு பகுதியில் நெல்வயல்களால் சூழப்பட்ட பிட்டியம்பதி என்னும் புண்ணிய தலத்திலே பத்திரகாளியம்மை வீரபத்திரர் சமேதராக கோயில்கொண்டு அடியார்களிற்கு அருள்பாலித்த வண்ணம் இருக்கிறார்

அவ்விடத்தில் இருந்த புளியமரத்தில் அமர்ந்திருந்து கிளிகள் அயலில் உள்ள நெல்வயல்களில் வேளாண்மைக் காலத்தில் வேளாண்மையை சேதப்படுத்துவதை கண்ணுற்ற முதன்மையினார் தாமே அதனைத் தறிக்க முனைந்தார் என்றும், அப்போது அம்மரத்தினடிப் புற்றுக்குள்ளிருந்து வெளிப்பட்ட நாக சர்ப்பம் அவரை சிறிதுதூரம் துரத்திச் சென்று தலை தூக்கி ஆடியதாகவும், அன்றிரவே அம்மையார் முதன்மையானரின் சொர்ப்பனத்திலே தோன்றி நமக்கு நிழல் அமைந்து வழிபடுமாறு பணித்ததையடுத்து அவ்விடத்தில் நிழல் அமைத்து வழிபடத்தொடங்கினார் என்றும், அம்மரமே இன்றும் தலவிருட்சமாக வியாபித்து நிற்கின்றது என்றும் கர்ணபரம்பரை வரலாறுகள் கூறுகின்றன.

பிட்டியம்பதியில் கோயில் கொண்டமையினால் பிட்டியம்பதி பத்திர காளியம்மை என்ற நாமம் அம்பாளிற்கு ஏற்பட்டது.

சிறுகுடில் அமைத்து வழிபடத் தொடங்கிய இவ்வாலயம் 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கர்ப்பக்கிரகமும், பிள்ளையார், வைரவர் என்னும் பரிவார தெய்வங்களிற்கும் மண்டபங்கள் அமைக்கப்பெற்று கற்கோயிலாக மாறியது. மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. விக்கிரகங்கள் அக் காலத்தை சேர்ந்தவை. 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கொடியேற்றத்துடன் தொடங்கி பத்தாவது நாளான பங்குனிமாத உத்தர நட்சத்திரத்தில் தேர்த் திருவிழாவும் அடுத்தநாள் தீர்த்தத் திருவிழாவாகவும் நடைபெற்று வருகின்றது.

1978 ஆம் ஆண்டு சித்திரத் தேர்கள் வெள்ளோட்டம் நடைபெற்றது. 1985 ஆம் ஆண்டு திருத்த வேலைகள் நடைபெற்று வைகாசி புனர்பூச நட்சத்திரத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1988 ஆம் ஆண்டு நவக்



கிரக மண்டபமும், 1989 ஆம் ஆண்டு சண்டேஸ்வரர் மண்டபமும் அமைக்கப்பட்டன. 1987 ஆம் ஆண்டு மணிக்கூட்டுக் கோபுரமும் 1995 ஆம் ஆண்டு வீரபத்திரர் மண்டபமும் திருத்தி அமைக்கப்பட்டன. 2001 ஆம் ஆண்டு புனருத்தாரண வேலைகள் நடைபெற்று ஆவணி ரோகிணி நட்சத்திரத்தில் கும்பாபிஷேகம் நடை பெற்றது. 2002ஆம் ஆண்டு வசந்த மண்டபம் மீள்நிர்மாணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. 2003 ஆம் ஆண்டு, மாசி மாதம் தெற்குப் புறத்தில் மூன்றுதள இராஜ கோபுரம் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. தற்போது அம்பாளிற்கு மகா ராஜகோபுரம் ஐந்து தளத்தில் அமைக்கும் பணிகள் நடைபெற்றுவருகின்றன..

**ஆலய அறங்காவலர்**

## மஹோற்சவ குருவின் ஆசிச்செய்தி

புருஷர்களிடத்தில் விஷ்ணுவாகவும், போகத்தில் பவானியாகவும், கோபத்தில் காளியாகவும், போரில் கொற்றவையாகவும் மங்கள ரூபிணியாக, பத்திரகாளியாக சங்கரத்தை பிட்டியம்பதியிலே எழுந்தருளியிருக்கின்ற அன்னை அருள் பாலிக்கின்றாள்.

காளி தத்துவம் அற்புதமானது. காளிஅன்னை காலம்கடந்து நிற்பவள். களிப்பின் எல்லையைத் தொடுபவள். தன்னை வணங்குபவர்களுக்கு வற்றாது அருள் சுரக்கும் ஜீவ ஊற்று.

மூவர்க்கும் முதற்பொருளாய், முத்தொழிலிற்கும் வித்தாகி, நாவிற்கும் மனத்திற்கும் நாடறிய பேரறிவாய் விளங்கும் அன்னையின் ரதோற்சவ தினமாகிய இன்று அனைத்து மக்களையும் துன்ப துயரங்களிலிருந்து விடுவித்து அமைதியான வாழ்க்கை அனைவருக்கும் அமைய அருள வேண்டுமென ஸ்ரீமகாமாரி அம்பாளை பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

சாதக இளவரசு
*சு. சுந்தர ஸ்ரீரங்கநாதக்குருக்கள்*
(வழக்கம்பரை அம்பாள் தேவஸ்தானம்)

## அம்பிகையின் அருட்கடாட்சம் தமிழ்மக்களுக்கு கிடைக்கட்டும்

வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதி ஸ்ரீபத்திர காளி அம்பாள் சமேதவீரபத்திர பெருமான் தேரேறிவரும் இந்நாளில் தமிழ் மக்களுக்கு நல்லின்பம் பொங்கட்டும், வசந்தங்கள் வாழ்வினில் வீசட்டும், இப்பூமியில் சமாதானம் நிலைத்து சாந்தியும் அமைதியும் பெருகட்டும், இயற்கையின் சீற்றங்கள் தணியட்டும், இயல்புவாழ்வு மலர பத்திரகாளி அம்பாளின் பாதங்களைப் பணிகின்றோம் - போற்றுகின்றோம் வட்டு இந்து வாலிபர்கள்.

இங்ஙனம்
இந்துவாலிபர் சங்கம் வட்டுக்கோட்டை, வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம் கொழும்புக்கிளை, வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க கனடாக் கிளை.


*துன்பம் துயர் நீங்கி சாந்தி அம்பாளின் தேர்பவனி அருள் தரும்.*
**பார்த்தீபன் உணவகம்**
*உரிமையாளர் :- சின்னராசா*
(வட்டுக்கோட்டை தபாலகம் அருகாமை) வட்டுக்கோட்டை

*பத்திரகாளி அம்பாளின் தேர் பவனியினால் மக்கள் அனைவருக்கும் கிருபா கடாட்சம் கிடைக்கப்பெற.*
**ருசாந்தன் ஸ்ரோர்ஸ்**
பலசரக்கு பொருட்கள், குழந்தைகளுக்கான பால்மா வகைகள், பிஸ்கற் வகைகள் தரமானதும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
உரிமையாளர் க.தேவகுமார்
தெல்லிப்பழை வீதி, வட்டுக்கோட்டை.

*அன்னையின் தேர் பவனியினால் அமைதியான வாழ்க்கை அனைவருக்கும் அமையவேண்டும்*
**மதுரா மல்ரி சென்ரர்**
பாடசாலை உபகரணங்கள், போட்டோ பிரதிகள், அழகு சாதனப் பொருட்கள், அன்பளிப்புப் பொருட்கள்
தெல்லிப்பழை வீதி, சங்கரத்தைச் சந்தி, வட்டுக்கோட்டை.
T.P: 0773-068864, 0777-100629

*சஞ்சலம் நீங்கி மனம் சாந்தி பெற பத்திரகாளி அருள் புரிவாள்.*
**கிருஸ்ணா வெதுப்பகம்**
*மூளாய் வீதி, வட்டுக்கோட்டை*

பத்திரகாளியின் தேர்பவனி நாட்டின் பசி பட்டினி நீங்கி அனைவரும் சுக வாழ்வு பெறவேண்டும்.
**யாழ் A.K.S அரிசி ஆலை**
உரிமையாளர்: A.K.S சபேசன்
*மூளாய் வீதி, வட்டுக்கோட்டை*

**கிருஸ்ணா தொலைத் தொடர்பகம்**
உள்ளூர் -021 2225890, 077 3086784, 060 2213154
வெளியூர் -0094 21222 5890, 0094 7730 86784, 0094 602213154
கண்ணகி அம்மன் ஆலய கதிரைகள் வாடைக்கு கொடுக்கப்படும்.
*மூளாய் வீதி, வட்டுக்கோட்டை*

*அன்னையின் தேர் பவனி ஈழம் எங்கும் சமாதானம் மலரட்டும்.*
**ஐங்கரன் உணவகம்.**
உரிமையாளர்: பெ.நவரட்ணம்
*தெல்லிப்பழை வீதி, வட்டுக்கோட்டை.*

**சுரேன் அலங்கார சேவை & ஒளி அமைப்பு**
**குமரன் பந்தல் சேவை**
பூமணவறை, முத்துமணவறை, சிங்கப்பூர் சோடினைப் பொருட்கள், அலங்கார ஒளி அமைப்புகள் மற்றும் பந்தல் சேவைகள்
*வட்டுக்கோட்டை தெற்கு, வட்டுக்கோட்டை*

**K.S பற்றரி சேவிஸ் & சார்ஜ்**
சகல விதமான பற்றிகளும் திருத்தியும், சார்ஜ் செய்தும் கொடுக்கப்படும். பற்றிகள் வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
*(சங்கரத்தை சந்திக்கு அருகாமையில்)*
*தெல்லிப்பழை வீதி, வட்டுக்கோட்டை.*

**சூட்டி பாம்ஸ் சென்ரர் & புஸ்பா மோட்டோஸ்**
கால்நடை தீன்கள், கால்நடைக்கான மருந்து வகைகள் கால்நடை வளர்ப்பிற்கான உபகர ணங்கள் கால் நடை உணவுகள் போன்றவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
**சூட்டி பாம்ஸ் சென்ரர்**
உழவு இயந்திர உதிரிப்பாகங்கள், உந்துருளி உபகரணங்கள், ஆட்டோ உதிரிப்பாகங்கள், வாகன எரிபொருட்கள் அனைத்து வாகனங்களுக்கான ரயர், ரியூப் வகைகள் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
**புஸ்பா மோட்டோஸ்**
*சங்கரத்தை சந்திக்கருகாமை, வட்டுக்கோட்டை.*

**லக்ஷ்மி அழகு மாடம்**
அழகு சாதனப்பொருட்கள், மின் உபகரணப் பொருட்கள் மற்றும் பாடசாலை உபகரணங்கள், அன்பளிப்புப் பொருட்கள்.
தெல்லிப்பழை வீதி, வட்டுக்கோட்டை

பல சரகுப் பொருட்கள், பால்மா வகைகள், சமையல் எரிவாயு (SHELL GAS), சீமெந்து அனைத்துப் பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
**அம்பாள் ஸ்ரோர்ஸ்**
*சற்கின்சன் றோட், வட்டுக்கோட்டை*

அன்னையின் ரத பவனியினால் பாரெங்கும் சாந்தியும் சமாதானமும் கிடைக்க அருள்புரிவாள்
**K.P TRAVELS & CATERING SERVICE**
எமது சேவைகள் : யாழ் ⇄ கொழும்பு
A.C சொகுசு வான் பஸ் சேவைகள், 24 மணி நேர ஆட்டோ சேவை திருமண வைபவங்கள் சகல மங்களகரமான வைபவங்களுக்கும் உணவு வகைகளினை குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் ஓடர்மூலம் செய்து கொடுக்கப்படும்.
உங்கள் தொடர்புகளிற்கு:-
Mobile-0777 781874, T.P.No. 021 2223038/ 3839, (யாழ்ப்பாணம்)
011 2441398 (கொழும்பு)
சங்கரத்தை சந்தி, வட்டுக்கோட்டை.


அம்பிகையின் தேர் பவனி தமிழ் மக்கள் அனைவரும் சாந்தியும் சமாதானமுமாய் வாழ அருள்புரிவாள்
**R.S.T பாலன் அரிசியாலை**
**No.-1 றோஸ் நாடு**
மாவடிச் சந்திக்கு அருகாமை,
மாவடி வட்டுக்கோட்டை


மலரமைப்பு: R.U.பாலமுருகன்

நன்றிகள்: பி.கோபிகிஸ்ணா (வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம்)
கோகிலன் (வடலியடைப்பு)

# திருப்பாடுகளைத் தியானிக்கும் கிறிஸ்தவ ஞானத்தின் வெளிப்பாடு திருச்சிலுவை

**போ**ராடத்துணிந்தவன் படைவரினும் தடைவரினும் இழப்புக்களைச் சந்திக்க



போராடியாகததான தரவேண்டும். அப்போது தான் அவனது இலட்சியக் கனவுகள் விடியல் பெறும். அவன் எதிரிகளுக்கு அவனது மரணம் வீழ்ச்சியாகவோ மடைமையாகவோ, ஏளனமாகவோ இருக்கலாம். ஆனால் அவனது பணி தியாகத்தின் தீபமாக எப்போதும் சுடர்விட்டு எரியும். அவனது தியாக மிகு வாழ்வு வரலாற்றில் கோடிடப்பட்டு காடடப்படுகின்றது.

இத்தகையதொரு இறையரசு படைக்கப் புறப்பட்ட வீரன் இயேசுவின் கதையைத் தான் இன்றைய வெள்ளிக்கிழமை நமக்கு நினைவுறுத்துகிறது. நமக்காக இயேசு தமது உயிரையே சிலுவையில் தியாகம் தந்த நாள் இன்று.

ஆண்டவர் மைந்தனான இயேசு அகிலம் வாழ்மாந்தராய் உருக்குலைக்கப்படுகிறார். வல்லமையுள்ள தேவ மைந்தன் வல்லமையற்றவராக "என் இறைவா! என் இறைவா! ஏன் என்னை கைவிட்டீர்" என்ற தொனியில் தமது கையறு நிலையினை நமக்குக் காட்டுகிறார்.

அனைத்தையும் ஆண்டு வருபவருக்கு எதற்காக இந் நிலை என நாம் சிந்தித்ததுண்டா? இயேசு நமக்கு ஒரு பாடம் புகட்டுகிறார். அதாவது அழிவு தரும் ஆசைகளுக்காக வசதிகளுக்காக நாமும் இறக்கவேண்டும்.


அப்பொழுதுதான் நமது உள்ளத்தில் தெளிவு பிறக்கும். அதை விட்டுவிட்டு ஆலய வசதிக்காக பணம் கொடுக்கிறேன் என்றோ ஒவ்வொரு வருடமும் நான் எழைகள் நலனுக்காக என்னால் இயன்றவரை பண உதவி செய்கின்றேன் என்றோ அல்லது எனக்கு திருவிலியம் பற்றி ஆழ்ந்த அறிவு இருக்கிறது என்றோ எண்ணி வாழ்ந்தால் மட்டும் போதாது. மாறாக எங்கெல்லாம் நாம் கிறிஸ்துவுக்காக, கிறிஸதவ மதிப்பீடுகளுக்காக நமது வாழ்வைத் தியாகம் செய்ய நேரிடுகின்றதோ, வல்லமை, புகழ், மதிப்பு இருந்தும் கிறிஸ்துவுக்காக அரவது சேவைக்காக நம்மை நாம் விட்டுக் கொடுக்கின்றோமோ, பழிச்சொற்கள் கண்டனங்களுக்கு ஆளாகின்றோமோ, சகிபபுத் தன்மையுடனும் பொறுமையுடனும் செயற்பட்டு நட்ந்து கொள்கின்றோமோ அப்போது தான் நாம் இயேசுவின் சாட்சிகளாக வருகின்றோம்.

சிலுவை கிரேக்கர்களுக்கு மகிமை. ஆனால் கிறிஸ்தவர்களுக்கோ இறைவல்லமை, ஞானம் என துூய பவுலார் சானறு பகர்கிறார். இன்று உலகில் பலரும் கிறிஸ்துவை அறிந்திருக்கிறார்கள் என்றால் அவர் எழுதிய புத்தகங்களினால் அல்ல, அவரிடமிருந்து பெற்ற உதவிகளினால் அல்ல மாறாக அவரது சிலுவைச் சாவால். இச் சலுவைச் சாவு கடவுளையும் மனிதனையும் இணைத்து வைத்தது.

இனறு கிறிஸ்தவர்களாகிய எமது வாழ்வில் நாம் பதவிகள், பட்டங்கள், செல்வங்கள், செல்வாக்குகள், புகழ் போன்றவற்றைத் தேடி ஓடுகின்றோம். பெயரும் புகழும் பெறுவதற்கு வாழநாள் முழுவதையும் செலவிடுகிறோம்.

தமக்காக அல்ல "இஸ்ராயல் மக்களின் நல் வாழ்விற்காக" என இறைவாக்கினர் சொயா வெளிப்படுத்துகிறார். அவரது

> ★ மீட்பின் இரட்சணியத்தின் சிலுவை மரணத்தை நினைவிலிருத்தி கிறிஸ்துவுக்குள் மீண்டும் பிறந்து இறைவழி தொடர பிரார்த்திப்போம்.
>
> ★ "சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவை ஏற்கும் அளவுக்கு கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார். எனவே கடவுளும் அவரை மிகவும உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார்"
>
> (பிலிப்பியர் 2:8-9)



எங்கு சுகமுண்டோ, எங்கு சொகுசு உண்டோ. எது எமக்குத் திருபதியை தருகின்றதோ அது தான் எமது வாழ்வின் கடையெல்லை என நினைத்துக் கொண்டு வாழ்ந்து வருகின்றோம். ஆனால் கிறிஸ்துவின சாவு அதுவும் சிலுவைச்சாவு ஒரு தியாகத்தின் வடிவம். அது துன்புறும் இறையூழியன் பற்றியது. இறையூழியனது உணமை உணர்வுகளைப் படம் பிடித்துக் காட்டும் இயல் புடையது. அவர்படும் துன்பம் தோற்றம் பெரிதும் உருக்குலைந்த நிலையில் காணப்பட்டது. இயேசு இழிவுபடுத்தப்பட்டார். நம் பிணிகளைத் தாங்கிக் கொண்டார். நம் துன்பங்களை அவர் சுமந்து கொண்டார். நமக்கு நிறைவாழ்வு அளிக்க அவர் தண்டிக்கப்பட்டார் என துன்புறும் ஊழியரின் வேதனைகளை இறைவாக்கினர் சொயா பட்டியற்படுத்துகிறார்.

எவ்வளவு தான் துன்பம் வந்தாலும் இறை நம்பிக்கையில் சிறிதும் தளராதவராய் இயேசு இருக்கிறார் என்பதை ஆண்டவரே உம்மீது நம்பிக்கை வைக்கிறேன். நீரே என் கடவுள், என வாழ்வின் ஒவ்வொரு கட்டமும் உமது கையில் உள்ளது. என் எதிரிகளின் கையினின்றும் என்னைத் துன்புறுத்துவோரின் கையினின்றும் விடுவித்தருளும் எனத் திருப்பாடு மூலம் மன்றாடுவது நமக்குத் தெரிகிறது.

எனவே இயேசுவின் விருப்பம் நிறைவேற அவரது பாடுகளில் பங்கேற்போமானால் நாம் கடவுளின் பிள்ளைகள் மட்டுமல்ல, பங்குதாரர்களாகவும் இருக்கிறோம். நாம் கடவுளிடமிருந்து உரிமைப்பேறு பெறுபவர்கள். கிறிஸ்துவின் பங்காளிகள், அவருடைய துன்பங்களில் நாம் பங்கு பெறவேண்டும். அப்போது தான் அவரோடு மாட்சியலும் பங்குபெறுவோம்.

கிறிஸ்தவர்களாகிய நாம் திருச்சிலுவையை உற்றுநோக்கும் போது இறை சித்தத்திறகுக் கீழ்படியும் மனநிலையை நம்மில் உருவாக்குவோம்.

**சிலுவை என்பது ஒரு வாய்ப்பு**
**அதைப் பயனுள்ளதாக்கிக் கொள்வோம்!**
**சிலுவை என்பது ஒரு சவால்**
**அதை சந்திப்போம்!**
**சிலுவை என்பது ஒரு கடமை**
**அதை நிறைவேற்றியே தீருவோம்!**
**சிலுவை என்பது ஒரு புதிர்**
**அதற்கு நாம் வாழும் போதே தீர்வு காண்போம்!**
**சிலுவை என்பது ஒரு கடல்**
**அதில் நீந்திக் கடப்போம்!**

கிறிஸ்துவின் மரணத்தில் பங்குபெறும் நாம் அவரோடோ எமது தீச் செயல்களிலிருந்து உயிர் பெறுவோம் என்பதை நினைப்போம். □

**நோயல்**

# தவறுதலாக நடந்த விபத்திற்காக இளைஞனைப் படையினர் தாக்கியமை கண்டிக்கத் தக்கது என்கிறார் ஞானவேல்

(வவுனியா)

வவுனியா சாஸ்த்திரி கூழாங்குளம் பகுதியில் இராணுவத்தினருக்கும் மக்களுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் காலை முறுகல்நிலை ஏற்பட்டது.

போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினரின் தலையீட்டின் பின்னர் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் ஈச்சங்குளம் பகுதியில் இருந்து வவுனியா நோக்கி துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த 25 வயதான கரன என்பவர் அதே திசையில் வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இராணுவத்தினரின் துவிச்சக்கர வண்டியுடன் தவறுதலாக மோதியுள்ளார்.

இதனையடுத்து இராணுவத்தினர் மேற்படி இளைஞனை 30 மீட்டர் வரை வீதியில் போட்டு உருட்டி கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

இந்த இளைஞன் கடுமையான காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். அத்துடன் இளைஞனை தமது கல்மடு இராணுவ முகாமுக்கு கொண்டு செல்வதற்கு முயற்சி செய்த வேளையில் மக்களுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

பொலிஸார் தருவிக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ள வேண்டும், போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் தளத்திற்கு வந்து விசாரணை மேற்கொள்ள வேணடும், பாதிக்கப்பட்ட இளைஞனை இராணுவம் கொண்டு செல்லக் கூடாது போன்ற கோரிகையை முன்வைத்து மக்கள் இராணுவத்தினருக்கு எதிராக கோஷங்களை எழுப்பினார்கள்.


இதனையடுத்து தளத்திற்கு சென்ற கண்காணிப்புக் குழுவினர் மக்களிடம் விசாரணை மேற்கொண்டனர்.

இதுகுறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரை அன்று மாலை சந்தித்த வவுனியா மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் ஞானவேல் இதற்கு கடுமையான ஆட்சேபனையினை தெரிவித்துள்ளார்.

தளத்திற்கு சென்று விசாரணை மேற்கொண்ட வவுனியா மாவட்ட இலங்கை போர்நிறுத்த கண்காணிப்பு குழுவின் பொறுப்பாளர் வார்ல்ட் ஜோர்போ இந்த சம்பவம் தொடர்பாக இராணுவத்தினருக்கு தனது அதிருப்தியை வெளியிட்டு இருப்பதாகவும் இது தொடர்பாக தான் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்ததாக வவுனியா மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் ஞானவேல் தெரிவித்தார்.

தவறுதலாகவே குறிப்பிட்ட இளைஞன் இராணுவத்தினரின் துவிசசக்கரவண்டியுடன் மோதியதாகவும் இதனைப் படையினர் சாட்டாக வைத்து இளைஞனைத் தாக்கியமை கண்டிக்கத்தக்கது என்றும் இவர் மேலும் கூறினார்.

(க)



**சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களைக் கொண்டு முல்லைத்தீவில் திருமறைக் கலாமன்றத்தினர் "பலிக் களம்" என்னும் நாடகத்தை மேடை ஏற்றினர்.**

**கலாபு,சணம் ஜீ.பி.பேர்மினஸ்சின் நெறியாழ்கையில் அளமபில், இரணைப்பாலை ஆகிய இடங்களில் மேடை ஏறிய பலிக்களத்தின் ஒரு காட்சி.**

**(படம்: கொழும்புத் துறைச் செய்தியாளர்)**

# மாதிரிக் கிராமமாக ஈவினை கிழக்கு...

(பொன்னாலை)

வலி-தெற்கு பிரதேசத்தில் ஈவினை கிழக்குக் கிராமம் போரூட நிறுவனத்தால் மாதிரிக்கிராமமாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றது.

வலி-தெற்குப் பிரதேசத்தில் போரூட் நிறுவனம் ஏற்கனவே 6 மாதிாக் கிராமங்களைத் தெரிவு செய்து, அபிவிருத்தி வேலைகளைச் செய்திருக்கின்றது.

தற்போது, 7 ஆவது மாதிரிக் கிராமமாக மேற்படி கிராமம் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றது. இக்கிராமத்தில் அபிவிருத்திப் பணிகள் மிக விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளன. (க-49)

## இன்று ஒரு தகவல்

# பூச்சிவைத்தியம்

"எங்கே போய்விட்டு வருகிறீர்கள்?" என்று கேட்டேன் எனக்குத் தெரிந்த ஒருவரைப் பார்த்து. "ஆஸ்பத்திரிக்கு" என்றார்." எந்த ஆஸ்பத்திரிக்கு?"என்றேன் கால்நடை ஆஸ்பத்திரிகது என்றார். என்ன விஷயம் என்றேன். "மாமனார்கத உடல்நிலை சீரில்லை. அதுதான்காலநடை வைத்தியசாலைக்குப போய்விட்டு வருகிறேன்" என்றார்.

"அடப்பாவி. அதற்கு அந்த ஆஸ்பத்திரிக்கா போவார்கள்?" என்றேன்."அட அதில்லை சார் முதலில் எமது குடும்ப டாக்டரைத்தான் தேடிக் கொண்டு சென்றேன். அவர் அப்போது தனது நாய்க்குட்டிக்கு உடல் நிலை சரியில்லை என்று அதைத்தூக்கிக் கொண்டு கால்நடை ஆஸ்பத்திரிக்குப் போயிருப்பதாகச் சொன்னார்கள். அதுதான் அங்கே போய் அவரைச் சந்தித்து விஷயத்தைக் கூறிவிட்டு வருகிறேன என்றார். அதன் பின்பு தான் எனக்குக் கொஞ்சம் நிம்மதியாக இருந்தது

பொதுவாக நமக்குத் தெரிந்த வகையில் டாகடர்கள் இரண்டு வகை.நமக்கு வைத்தியம் செயயும் டாக்டர்கள் ஒரு வகை. நம்மிடமுள்ள ஆடு, மாடு,கோழிகளுக்கு வைத்தியம் செய்யும் டாக்டர்கள் ஒருவகை. இப்போதுதான் எனக்குத் தெரியும் இன்னொரு வகையான டாக்டர்களும் உண்டென்பது. அது யாரென்றால் பூச்சிகளுக்கு வைத்தியம் செய்யும் டாக்டர்கள் அதாவது பூச்சி டாக்டர்கள்.

வெளிநாடுகளில் அப்படியெல்லாம் கூடச் சில பேர் இருக்கிறார்களாம். பிரிட்டனில் யார்க் ஷைர் வட்டாரத்தில் ராதர் ஹேராம் என்று ஒரு ஊரில் ஒரு விலங்கியல் மருத்துவர் இருந்தார். அவரது ஆஸ்பத்திரியின் வாசலில் தினமும் நிறையப் பேர் நின்று கொண்டிருப்பார்கள். கையில் கண்ணாடிக் கூண்டோ தகரடப் பாவோ இருக்கும். அதற்குள் ஏதாவது பூச்சிகள் இருக்கும். அதற்கு வைத்தியம் செய்தவர்கள் தான் அவர்கள் எல்லோரும். சிலந்திப் பூச்சி, பல்லி, தேள்,பாம்பு என்று ஏதாவது இருக்கும்.

பொழுது போக்காக சிலபேர் நாய், பூனை, கிளி, மைனா, புறா என்று வளர்க்கிறார்கள் அல்லவா. அதுபோல் இப்போதெல்லாம் தேள், பல்லி, பாம்பு, பூச்சி இதையெல்லாம் வளர்க்க ஆரம்பித்துவிட்டார்களாம் இது ஒரு புது மொடல். இப்பொது கூண்டுக்குள்ளே எதையாவது வளர்ப்பது, அதற்கு ஏதாவது நோய் வந்துவிட்டால் வைத்தியம் செய்வதற்கு டாக்டரிடம் போக வேண்டியது.

ரத்தம் உறிஞ்சும் அட்டைகள் கூட இவர்களிடம் வைத்தியத்திற்கு வருகின்றனவாம். சிலந்திகளில் செங்கால் சிலந்தி என்று ஒரு வகை. மத்திய அமெரிக்கக் காடுகளில் இது அதிகம். சிலந்திகளில் இது மிகவும் விலை உயர்ந்தது இந்த ரகம் தான். கால்களில் சிவப்புக்கோடுகள் இருக்கும். இந்த இனம் இப்போது குறைந்து கொண்டு வருவதனால் சர்வதேச விதிகளின் படி இவற்றின் ஏற்றுமதி இறக்குமதிக்குத் தடைவிதிக்கப்பட்டிருக்கிறது. அதனால் இதை வளர்ப்பவர்கள் வீட்டுக்குள்ளேயே இனவிருததி மூலமாக பெருக்கி விற்பனை செய்து வருகின்றனர். இந்த வகைச் சிலந்தி தான் இப்போது அதிகம் வருகிறதாம்.

சரி. இவற்றிற்கு எப்படி வைத்தியம் செய்கின்றனர். முதலில் அதைக குளிர்பதனப்பெட்டியின் வழுவழுப்பான சுவரில் விட்டவுடன் அவை மெதுவாக இறங்கி வரும் போது அதன் நோயைக் கண்டுபிடிப்பது சுலபம். அதன பின் கிருமிகளைக் கொல்லும் மருந்துகளையோ வலி நிவாரண மருந்துகளையோ கொடுப்பார்கள் கால் உடைந்த சிலந்திகளுக்குப் பசை கொண்டு சிகிச்சை செய்வார்கள். சில சிலந்திகளிற்கு உடைந்த காலை எடுத்துவிட்டால் புதிய கால வளர்ந்து விடும்.

சிலந்திகளை மனிதர்கள் கையில் எடுக்கும் போது அது பயந்து போய்க் கீழே குதிக்கும். அதனால் கால் உடையும் இல்லாவிட்டால் வயிறு சேதமடையும். அந்த நிலையில் வரும் சிலந்திகளுக்கு மயக்க மருந்து கொடுத்து சிகிச்சையளிப்பார்களாம். பார்த்தீர்களா பூச்சிகளுக்கு வந்த வாழ்வை.

நமது ஊரிலும் வீடுகளில் பூச்சிகள் வளருவது உண்டு. ஒருவர் வந்தார்." எனக்கு 3 ஆயிரம கரப்பான் பூச்சி அவசரமாகத் தேவைப்படுகிறது. எங்கே கிடைக்கும்?" என்றார்." கரப்பான் பூசசியா?" எதற்கு என்று கேட்டேன். "அது வேறு ஒன்றுமில்லை. நான் குடியிருக்கும் வாடகை வீட்டைக் காலி செய்யப் போகிறேன். வீட்டுச் சொந்தக்காரர் என்ன சொல்கிறார் என்றால், இந்த வீட்டுக்கு நான் குடி வந்த போது எப்படி இருந்ததோ அதே நிலைமையில் விட்டு விட்டுப் போகவேண்டும் என்று சொல்லியிருக்கிறார். "அதனால் தான் கேட்டேன்" என்றார்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# அரசாங்கத்தின் நீதித்துறையில் தமிழர்களுக்கு நம்பிக்கையில்லை

## சிவாஜிலிங்கம் எம். பி.



(கொழும்பு)

அரச நீதித்துறையில் தமிழர்களுக்கு நம்பிக்கையில்லை. அத்துடன் சமூக விரோதிகளுக்கு பொலிஸாரே துணை நிற்கின்றனர் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் நிலையங்களில் சிங்கள மொழியிலேயே முறைப்பாடுகள் பதிவு செய்யபபடுகன்றன. பின்னர் அதனை கொச்சைத் தமிழில் மொழி பெயர்க்கின்றனர். அதனை வைத்துக் கொண்டே நீதி மன்றங்கள் தீர்ப்புகளை வழங்குகின்றன.

இது தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் பெரும் அநீதியாகும்.

குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை சட்டத்தைத் திருத்துவதற்கான சட்ட மூல விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் அவர் மேலும் கூறுகையில்,

குறறங்களைத் தடுக்க காலத்திற்கு காலம் சட்டங்களை இயற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து அதனை நடைமுறைப்படுத்தினாலும், குற்றச் சம்பவங்கள் குறைந்ததாகத் தெரியவில்லை.

சில சமூகவிரோதிகளுக்கு ஒரு சில பொலிஸார் துணை நிற்பதே இதற்குக் காரணம்.

பாதாள உலகக் கோஷ்டி குழுக்கள் அரசியல்வாதிகளின் பின்னால் இருந்து இயங்குகின்றனர். அரசாங்கததிலுள்ள அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினாகள் பாதாள உலக கோஷ்டியைப் பாதுகாக்கின்றனர்.

பொலிஸாருக்கு அதிகமான அதிகாரங்கள் வழங்கப்படடுள்ளன. ஆனால் அவர்கள் அந்த அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்கின்றனர். மேல்மாகாணத்தில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு பொலிஸ் பதிவுககாக விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படுகின்றன.

தமிழர்களைப் பொலிஸில் பதிவு செய்கிறீகளா என பொலிஸ் மா அதிபரிடம் கேட்டால் அவ்வாறு இல்லையென கூறுகிறார்.

ஆனால் கொழும்பில் சில இடங்களில் பொலிஸார் தமிழர்களை பதிவு செய்கின்றனர். இங்கு ஒரு சாதாரண பொலிஸ் அதிகாரிக்கு மேலிடத்து உத்தரவில்லாமல் பொலிஸ் பதிவை மேற்கொள்ள அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழர்கள் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளை வழங்கும் போது அதனை சிலர் பதிவு செய்கின்றனர். வடக்கு மாகாணங்களிலுள்ள பொலிஸ் நிலையங்களில் சிங்களத்தில் பதிவு செய்து விட்டு அதனை கொச்சைத் தமிழில் மொழி பெயர்ப்பு செய்கினறன.

பொலிஸாரின் முறைப்பாடுகளை வைத்துக் கொண்டு தான நீதிமன்றங்களும் தீர்ப்புகளை வழங்கிவருகின்றன. பொலிஸாரை நீதிபதிகள் நம்புகின்றனர்.

அதுமட்டுமன்றி தமிழர்களின் தமிழ்த் தேசிய போராட்ட உணர்வுகளை மழுங்கடிப்பதற்காக சமூகத்தில் துரோகம் புரிபவர்களை தூண்டி சமூக குழப்பங்களை பொலிஸார் உருவாக்குகின்றனர்.

எனவேதான் குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்கு பொலிஸாரே காரணமென கூறுகின்றோம். புலிகளின் கட்டுபபாட்டுப் பகுதிகளில் குற்றச் செயல்கள் இல்லை. அங்குள்ள சட்டத்தரணிகள் வழக்குத் தாக்கல் செய்வதற்காக 200 ரூபா மாத்திரம்தான் அறவிடுகின்றனர்.

ஆனால் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அப்படியில்லை. புலிகளின் நீதித்துறை அங்கு சிறப்பாக இடம் பெறுகிறது.

ஆனால் இலங்கை அரசாங்கத்தின் நீதித்துறையில் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையில்லை. இதனால் எமக்கு சுயநிர்ணய உரிமையை வழங்குங்கள். நாங்கள் நிர்வாகத்தை நடத்துகின்றோம் என கோருகினறோம என்றார். (க)

# ஏ-௯ நெடுஞ்சாலை தொடர்பான புகைப்படக் கண்காட்சி யாழிலும்..

(கொழும்பு)

இலங்கை தேசிய சமாதான பேரவை தனது ஏ-9 புகைப்படக் கண்காட்சியை அடுத்த மாதம் 4 ஆம் திகதி தொடக்கம் 6 ஆம் திகதிவரை யாழ்ப்பாண நூலகத்தில் நடாத்த ஏற்பாடு செய்துள்ளது.

இப்புகைப்படக் கண்காட்சியின் அனைத்துப் புகைப்படங்களும் இலங்கையில் 20 வருடங்களுக்கு மேலாக வசிக்கும் ஜேர்மனிய புகைப்படப்பிடிப்பாளரான வோல்டர் கெலர் என்பவருடையதாகும். இப்புகைப் படங்கள் யுத்த நிறுத்தத்துக்கு பின்னர் ஏ-9 வீதியில் மக்கள் வாழ்க்கை மாறுதல் அடைந்த விதம் தொடர் பானவையாகும். இப்புகைப்பட கண்காட்சியில் 120 புகைப்படங்கள் உள்ளடககப்பட்டுள்ளது. இப்புகைப்பட கண்காட்சி ஏ-9 வீதியினூடாக தங்களை அழைத்துச செல்லும் முதலாவது புகைப் படகண்காட்சியானது கண்டி குயின்ஸ் ஹோட்டலில் நடத்தப்பட்டது.

அங்கு சிங்கள பேரினவாதிகளின் எதிர்ப்புக்கள் பல மேற்கொள்ளப்பட்டன.

ஏ-9 பாதையின் முதலாவது மைல்கல் கண்டி குயிணஸ ஹோட்டலருகில் என்ற காரணத்தினால் முதலாவது கண்காட்சி கண்டியில் நடத்தப்பட்டது. யாழ்பாண நூலகத்தின் அருகே ஏ-9 வீதி நிறைவடைகின்றது. ஆதலால இரண்டாவது கண்காட்சியை யாழ்ப்பாண நூலகத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டதன் பின் இப்புகைப்படக கண்காட்சி ஏ-9 வீதியினூடாக கிளிநொச்சி, வவுனியா போன்ற பிரதேசங்களிலும் மிகிந்தலை, தம்புள்ள மற்றும் கொழும்பு ஆகிய பிரதேசங்களிலும இக் கண்காட்சி நடத்தப்படவுள்ளதாக தேசிய சமாதான பேரவையின் சிரேஷ்ட ஊடக அலுவலர் சுதேஷ் சில்வா அறிவித்துள்ளார். யாழ்ப்பாண பிரதேசத்தின் இக் கண்காட்சிக்கான இணைப்பாளராக அருட்தந்தை சி.ஜி.ஜெயக்குமார் பொறுப்பேற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# கற்பிட்டிப் பகுதியில் நேற்று மீனவர்களிடையே மோதல்

(புத்தளம்)

கற்பிட்டி மீனவர்களுக்கும் வத்தளம் குண்டுப் பிரதேச மனவர்களுக்குமிடையே ஏற்பட்ட முறுகல் நிலையை அடுத்து நேற்று முன்தினம் அப்பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை தொழிலுக்குச் சென்ற 22 கறபிட்டி மீனவர்கள் 22பேரை வத்தளம் குண்டு மீனவர்கள் தடுத்து வைத்ததுடன் அவர்கள் சென்ற 9 இயந்திரப்படகுகளையும் பறிமுதல் செய்தனர்.

அததுடன் அவர்களின் மூன்று வலைகளையும் தீயிடடுக் கொளுத்தியுள்ளனர். இதனையடுத்து அங்கு ஏறபட்ட பதற்ற நிலையை தணிப்பதற்கு பெருமளவான கடற்படையினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக கற்பிட்டிப் பொலிஸாருக்கும் மீனவர்களுக்குமிடையே நேற்று முன்தினம் முக்கிய சந்திப்பிபொன்று இடம்பெற்றது. இதே வேளை, வத்தளம் குண்டுப்பகுதிகளைச் சேர்ந்த இரண்டு மீனவாகள் கற்பிட்டி மீனவர்களால் நேற்று முன்திைம தடுத்து வைககப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இருகுழுக்களுக்குமிடையே நீண்ட காலமாக இடம் பெற்றுவந்த லைலா மற்றும் சுருக்குவலைப் பிரச்சினைக்கு மீன்பிடி நீரியல் வளத்துறை அமைச்சானால தீர்வு காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-15)

# உயர் திருவிழா

(பொன்னாலை)

புங்குடுதீவு- அந்தோனியார் ஆலய உயர் திருவிழா எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. ஏப்ரல் மாதம் 9ஆம திகதியாகிய மறுநாள் சுவாமி ஜே.ஈ. ஜெயசீலனின நெறிப்படுத்தலில் நற்கருணை விழா இடம் பெற்று அதன் மறு நாள் 10ஆம் திகதியன்று உயர் திருவிழா இடம் பெறவுள்ளது. (க-49)

# லெபனானில் குண்டு வெடிப்பு இரு இலங்கையர் காயம்!

(லண்டன்)

லெபனானின் காஸ்லி நகரில் நேற்று முன்தினம் புதன்கிழமை அதிகாலை இடம் பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டனர். இரு இலங்கையர் உட்பட மூவர் காயமடைந்தனர்.

கிறிஸ்தவர்கள் செறிந்து வாழும் இப் பகுதியிலுள்ள மத்திய வர்த்தக நிறுவன மொன்றுக்குள், இக் குண்டு வெடித்தது. அச்சமயம் அந்நிறுவனம் மூடப்பட்டிருந்தது. ஏற்கனவே அதற்குள் வைக்கப்பட்டிருந்த குண்டே வெடித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இறந்தவர்களும், காயமடைந்தவர்களும் கட்டிடக் கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டு வந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். இங்குள்ள கிறிஸ்த எதிர்க்கட்சிகள் சிரியாவுக்கு எதிரானவை. லெபனானின் விவகாரங்களில் சிரியா தலையிடுவதை இக் கிறிஸ்தவ எதிர்க்கட்சிகளும் ஏனைய எதிர்க்கட்சிகளும் கூட்டாக ஆட்சேபித்து வருகின்றன.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமையும், கிறிஸ்தவர்கள் அதிகளவில் வசிக்கும் இப்பகுதியில் கார்க் குண்டொன்று வெடித்தது. இதில் 11 பேர் கொல்லப்பட்டனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பால், வர்த்தகக் கட்டிடத்தின் கூரை சரிந்து விழுந்ததுடன் அருகில் இருந்த கட்டிடங்களின் ஜன்னல் கண்ணாடிகள நொருங்கிச் சிதறின. சிரியாவுக்கு ஆதரவான லெபனான் அரசும் அதற்கு ஆதரவான சக்திகளும் எதிர்க் கட்சிகளுக்கு எதிரான தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன. இக்குண்டுத் தாக்குதல்களுக்கு இவையே சூத்திரதாரிகள் என எதிர்க்கட்சிகள் குற்றஞ் சாட்டுகின்றன. (க)

# பொதுக்கட்டமைப்பு, புலிகளுக்கு தமிழீழத்தைப் பெற்றுக் கொடுக்கும்

## அரசுக்கு எச்சரிக்கின்றது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

(கொழும்பு)

புலிகளுடன் பொதுக்கட்டமைப்பு அமைக்கும் அடிப்படையில் இருந்து அரசாங்கம் உடனடியாக வெளியேற வேண்டும்.

இல்லாவிடின் அதனைத் தடுப்பதற்கு தேசப்பற்றுள்ளவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

பொதுக்கட்டமைப்பு அமைப்பதென்பது புலிகளுக்கு சட்டரீதியான அங்கீகாரத்தை வழங்குவதற்கு சமமாகும். அதுமட்டுமன்றி இடைக்கால நிர்வாக அதிகாரசபையை விட அபாயகரமானது என்றும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

வடகிழக்கை புனரமைப்புச் செய்ய பொதுக் கட்டமைப்பு தேவையில்லை என்பதற்கு இந்தியாவின் நிவாரண நடவடிக்கைகள் உதாரணமாகும் என்றும் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக மேற்படி இயக்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டின் இறைமையைப் பாதிக்கின்ற பொதுக்கட்டமைப்பை நிறுவுமாறு சர்வதேச அமைப்புக்கள் அழுத்தம் தெரிவித்து வருகின்றன.

ரணில் விக்கிரமசிங்க புலிகளின் தலைவருடன் செய்துகொண்ட 'நாட்டைக் காட்டிக்கொடுக்கும் உடன்படிக்கை' யால்தான் இவ்வாறான அழுத தங்கள் வந்துகொண்டிருக்கின்றன.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் தொடர்பாக பாராளுமன்றத்திற்கு இருக்கின்ற அதிகாரத்தை இல்லாமல் செய்யும் முயற்சியே இதுவாகும்.

சுனாமியால் பாதிப்படைந்த அறுகம்பே பாலத்தை இந்தியா தனது இராணுவப் படைகளைக்கொண்டு நிர்மாணித்தது. இதற்கு பொதுக்கட்டமைப்பு தேவைப்படவில்லையென்பதை ஞாபகப்படுத்துகின்றோம்.

புலிகளின் கையைப் பலப்படுத்தவே பொதுக்கட்டமைப்பை நிறுவுமாறு சர்வதேச அமைப்புகள் வலியுறுத்துகின்றன. புலிகளுக்கு அரச மட்டத்திலான சட்டரீதியான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுக்கவே சர்வதேச அமைப்புக்கள் முயற்சிக்கின்றன.

அந்தவகையில் இலங்கையின் இறைமைக்கு பங்கம் விளைவிக்கப்படுகின்ற நடவடிக்கைக்கு இடமளிக்கமுடியாது.

பொதுக்கட்டமைப்பை உருவாக்குவது புலிகளுக்கு தமிழ்ழத்தை அமைப்பதற்குச் சமமானதாகும்.

எனவே இந்தச் செயற்பாட்டிலிருந்து அரசாங்கம் உடனடியாக விலகவேண்டும். அத்துடன் பொதுக் கட்டமைப்புத தொடர்பாக புலிகளும் அரசாங்கமும் இதுவரை பரிமாறிக்கொண்ட ஆவணங்கள் வெளியிடப்படவேண்டும். (க)

## அந்தர் யோகம்

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ணா சாரதா சேவாச்சிரமத்தினரால் நாளை சனிக்கிழமை வேம்படி உயர்தர பாடசாலை மண்டபத்தில் அந்தர் யோகம் நடைபெறும்.

இந்நிகழ்ச்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவிகள் மட்டுமே பங்கு கொள்ள அனுமதிக்கப்படுவர்.

காலை 9மணிக்கு பஜனையுடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வில் ஸ்ரீஇராமகிருஷ்ணர் பற்றிய திரைப்படம் காண்பிக்கப்படுவதோடு தியானம், சொற்பொழிவு, கலந்துரையாடல் முதலிய நிகழ்ச்சிகளும் நடைபெறும். (து)

# தொண்டு நிறுவனங்கள் மீது பொதுமக்கள் கடும் அதிருப்தி

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் சில சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஐக்கியநாடுகள் சபையின் அமைப்புக்களினால் மேற்கொளளப்படுகின்ற செயல்திட்டங்கள் அமுல் செய்யப்பட்டமை குறித்து மாவட்டமட்டத்தில் இருக்கின்ற பொதுமக்கள் மற்றும் நலன் விரும்பிகள் மத்தியில் பெரும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

இத்தகைய அமைப்புக்களின் அதிகாரிகள், மாவட்டத்தில் இருக்கக்கூடிய மக்களின் உண்மையான தேவைகள் மற்றும் பிரச்சினைகள் குறித்து சரியான முறையில், கிராமிய மக்களைக் கலந்துரையாடாமல், அரசஅதிகாரிகளின் செல்வாக்குக்காகவும், அறிமுகத்துக்காகவும் வேண்டிய திட்டங்களை அமுல்செய்து பல இலட்சம் ரூபா நிதியை செலவழித்துவருகின்றன எனக் கூறப்படுகின்றது.

இவ்வாறு மேற்படி அமைப்புக்கள் சிலவற்றில் அமைக்கப்பட்ட பொது மண்டபங்களில் ஆடு மாடுகள் போன்றவையே பகல் இரவுவேளைகளில் தஞ்சமடைந்திருப்பதைக் காணக்கூடியதாக உள்ளதாகவும் பொதுமக்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இத்தகைய செயல்கள் மூலம் பெருந்தொகையான நிதி செலவழிக்கபபட்டுள்ளதே தவிர அதன்மூலம் பொதுமக்கள் எந்தவகையிலும் பயன் அடையவில்லை எனவும் கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இத்தகைய அமைப்புக்களினாலும், அரச நிர்வாகங்களினாலும் அமுல்செய்யப்பட்ட அல்லது அமுல்செய்யப்படுகின்ற அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு பணிகள் குறித்து பொது மக்கள் மத்தியில் போதிய தகவலும் அறிவும் இல்லாமல் இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (க-16)

## வழிபாடு

(யாழ்ப்பாணம்)

ஆண்டவரின் மரண நினைவு நாளை முன்னிட்டு இன்று புனித யாகப்பர் ஆலயத்தில் பெரிய சிலுவைப்பாதை 6.30மணிக்கும், திருச்சிலுவை வழிபாடு மாலை 6.00மணிக்கும் நடைபெறவுள்ளது.

இச் சிலுவை வழிபாட்டில் யேசுவின் பாடுகள், மரணக் காட்சித் தியானம், முத்திசெய்தல் வழிபாடுகள் இடம்பெறும். (க-9)

## உ.சபைகளை நல்லமுறையில் இயங்கச் செய்ய

# வரியிறுப்பாளர் சங்கங்கள் அமைப்பது அவசியம் என்கிறார் மாவை எம்.பி

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் இருக்கின்ற உள்ளூராட்சி சபைகளை நல்ல முறையில் இயங்கச் செய்வதற்கு ஏற்றவகையில் ஒவ்வொரு பிரதேசத்திலும் வரியிறுப்பாளர் சங்கங்களை அமைப்பது அத்தியாவசியம் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கும்போது,

உள்ளூராட்சி சபைகள் அப்பிரதேச மக்களின் நன்மை கருதிச் செயல்படவில்லை என தனிப்பட்ட ரீதியில் குற்றச்சாட்டுக்களை அள்ளி வீசுவதால், குறித்த சபைகளின் உயர் மட்ட அதிகாரிகளை நல்லமுறையில் இயங்கச் செய்யமுடியாது.

எனவே மாவட்டத்தில இயங்குகின்ற அனைத்து பிரதேச சபைகள், நகரசபைகள் மற்றும் யாழ்.மாநகர சபை ரீதியில் வரியிறுப்பாளர் சங்கங்களை அமைக்க உடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட ரீதியில் அனைத்து மாவட்டங்களிலும் இருக்கும் வரியிறுப்பாளர் பிரதிநிதிகளை உள்ளடக்கிய வகையில் வரியிறுப்பாளர் சங்கம் ஒன்றினை விரைவில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 1980 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் வரியிறுப்பாளர் சங்கங்கள் அனைத்துப் பிரதேசங்களிலும் இயங்கி இருந்த போதிலும் கூட யுத்த நடவடிக்கைகள காரணமாக அவை செயல்படாமல் போனமை குறிப்பிடத்தக்கது. (க-16)

# இந்திய கடல் எல்லைக்குள் தத்தளித்த 7 மீனவர்கள் மீட்பு

(மன்னார்)

தூத்துக்குடி கடற்பரப்பில் தத்தளித்துக்கொண்டிருந்த 7 இலங்கை மீனவர்கள் இந்திய கடலோரக் காவற்படையினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

இலங்கை மீனவர்களின் மீன்பிடி விசைப் படகு ஒனறு இந்தியக் கடல் எல்லைக்குள் பழுதடைந்திருப்பதாகச் சென்னையிலுள்ள கடல்சார் மீட்புப் பணி நிலையத்துக்கு அவசர தகவல ஒன்று அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து விரைந்த இந்திய கடலோரக் காவற்படை வீரர்கள் தூத்துக்குடி கடலில் இயந்திரம் பழுதடைந்ததினால் தத்தளித்த 7இலங்கை மீனவர்களையும் மீட்டனர்.

மனிதாபிமான முறையிலேயே இலங்கை மீனவர்களைக் காப்பாற்றியதாகத் தெரிவித்த கடலோரக் காவற்படையினர், இருப்பினும் இந்தியக் கடல் எல்லைக்குள் அனுமதியின்றி பிரவேசித்ததினால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவித்தார். (து-8)

## தேவாரத் திரட்டு முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்த பூரணைத் தினத்தில் நடாத்திவரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல் பன்னிரு திருமுறைப் பாராயணம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு மறைத தலைவர் பண்டிதர் வ.பேரினபநாயகம் தலைமையில் யாழ்பபாணம் திருநெல்வேலி அரசடி ஸ்ரீ சிவகாம சுந்தரி அம்பாள் ஆலயத்தில் ஆலய பரிபாலன சபையினின் அனுசரணையுடன் நடாத்தப்படவுள்ளது. (க)

## பொலிஸ் அதிகாரி உடுகம் பொல கைது

(கண்டி)

கண்டி முன்னாள் பொலிஸ் அதிகாரி குலசிறி உடுகம்பொல கொழும்பில் இருந்து சென்ற விசேட பொலிஸ் குழுவினரால் நேற்று முன் தினம் கைதுசெய்யப்பட்டார்.

மிலேனியம் சிட்டி ஆயுதக் களஞ்சிய பரிசோதனை உட்பட 5 குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலேயே அவர் கைதுசெய்யப்பட்டார்.

அவர் கண்டி நீதிமன்ற நீதிவான முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவரை 5இலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல நீதிவான் உத்தர விட்டார்.

சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் எதிர்வரும் 29ஆம் திகதி அவர் ஆஜராக வேண்டுமெனவும் நீதிவான் உத்தர விட்டார். (து - 4)


ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிரியையும்



மண் மகிழ 11 - 08 - 1983

கண் நெகிழ 26 - 12 - 2004

முருகேசு (இரட்ணசிங்கம்) பிரதீப்

எங்கள் குல விளக்கு பிரிவுச் செய்தி கேட்டு ஓடோடிவந்து எமது துயரில் பங்குகொண்ட உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் மற்றும் பல வழிகளிலும் உதவிசெய்த அனைவருக்கும் எம் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் 25.03.2005இல் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிரிகைகளிலும் அத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருப்பதி
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

குடும்பத்தினர்

(9411)



நீங்கள் கனடா செல்ல விரும்புகின்றீர்களா?
நீங்கள் சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களா?

கனடாவில் ஸ்பொன்சர் (Sponser) வசதிகள் இருப்பவர்கள் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

மத்திய கிழக்கு நாடுகளில் உடனடி வேலைவாய்ப்பும், ஆலோசனைகளும்

ஓமான், டுபாய், டோகா, சவுதிஅரேபியா, பாரின்ஸ் ஆகிய நாடுகளில் பின்வரும் வேலைகளுக்கு கவர்ச்சிகரமான சம்பளத்துடன் வேலைவாய்ப்பு
மேசன், தச்சுத் தொழில் (SHUTTERING), இரும்பு வேலை (STEEL FIXER), அலுமினியப் பிற்றிங், எலக்ற்றிசியன், A/C Technicians, சாரதிகள்.

இங்கிருந்துகொண்டே ஒரு PASSPORT ஐ பெறுவதற்குரிய ஆவண ஒழுங்குகள், PASSPORT இல் பிள்ளைகளை இணைத்தல், பெயர் மாற்றம் புதுப்பித்தல், அடையாளம் அடையாள அட்டைகளை இணைத்துகொள்ளல் ஆகியவற்றுக்கும்,

ஸபொன்சர் (Sponser) மூலமாக வெளிநாடுகளுக்குச் செல்வதற்குரிய (கனடா, லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ்) VISA ஒழுங்குகள், ஆலோசனைகள் எம்மால் செய்துகொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு:

RAINBOW TRAVELS & TOURS
32/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(அபிநயா நகைமாடத்துக்கு மேல்)
தொலைபேசி: 222 3918, 0777 328219

குறிப்பு: எமது ஸ்தாபனம் கொழும்பைத் தலைமை அலுவலகமாகக் கொண்டு இயங்குகின்றது.



முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 22 - 10 - 1954

மறைவு 04 - 04 - 2004

அருணாசலம் ஜெயகுமாரன்

(Aggreko மின்நிலையம், சுன்னாகம் )

அன்புள்ளம் கொண்ட மகனாய், கணவனாய், தந்தையாய், சகோதரனாய், நண்பனாய், உங்கள் சிரித்த முகமும் அன்பான பேச்சும் ஓராண்டு மறைந்தாலும் மறக்கமுடியாமல் தவிக்கின்றோம்.

உங்கள் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

பிள்ளையார் கோவிலடி, சித்தன்கேணி.

குடும்பத்தினர்

(9502)

# காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வின்றேல் சமரசப் பேச்சு முறிந்து விடும்

## பாக்.அதிபர் மிரட்டல்

(இஸ்லாமாபாத்)

காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காணாவிட்டால் இந்தியா -பாகிஸ்தான் சமரசப் பேச்சு முறிந்விடும் எனறு அதிபர் முஷாரப் மிரட்டல் விடுத்துள்ளார்.



பாகிஸ்தானின் தேசிய தினம் தலைநகா இஸ்லாமாபாததில் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டதை யொட்டி இராணுவ அணிவகுப்பு நடந்தது. அனுசக்தி ஏவுகணை களை டாங்கிகள், ஜெட் போர் விமானங்கள் அணிவகுத்து வந்தன. அணிவகுப்பு மரியாதையை அதிபர் முஷாரப் ஏற்றுக்கொண்டார்.

அணுகுண்டு வைத்துள்ள நமது அண்டைநாடான இந்தியா 1957க்குப் பிறகு நம்முடன் 3 போர்களை நடத்தி இருக்கிறது. அதில் 2போர்கள முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் காஷ்மீருக்காக நடத்தப்பட்டவை ஆகும். 2002இல இன்னொரு போர் உருவாகும் சூழ்நிலை உருவான பிறகு நம்பிக்கை ஊட்டும நடவடிக்கைகள் இந்தியா சார்பில் மேற்கொள்ளப்பட்டன. தூதரகம், வர்த்தகம், விளையாட்டு, போக்குவரத்து என்று பல்வேறு துறைகளிலும் இருநாட்டு உறவை இந்தியா பலப்படுத்தியது.

முசுபராபாத் - ஸ்ரீநகர் இடையே பஸ் போக்குவரத்து தொடங்குவதை நான் வரவேற்கிறேன். இது காஷ்மீர் மக்களுக்கு நிவாரணம் அளிக்கலாம். இருபக்கமும் பிரிந்து கிடக்கும் குடும்பங்கள் மீண்டும் சநதித்துக்கொள்ள வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கலாம்.

ஆனால் இந்த பஸ் போக்குவரத்து காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு ஆகாது. இது நம்பிக்கை ஊட்டும் நடவடிக்கைகளின் ஒரு படிதான். காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படாவிட்டால் இந்தியா - பாகிஸ்தான் இடையே நடக்கும் சமரசப் பேச்சுவார்த்தை முறிந்துவிடும.

காஷ்மீரில் உள்ள தீவிரவாதிகளுககு பாகிஸ்தான் ஆயுத உதவி செய்வதாக இந்தியா நீண்டகாலமாக குற்றம்சாட்டி வருகிறது. அதை நாம் மறுத்தோம் காஷமீர் மக்கள் நடத்தும் சுதந்திர பேராட்டத்துக்கு ராஜிய தார்மீக உதவிகளைத்தான் நாம் அளித்து வருகிறோம்.

அவர்களது போராட்டத்தில் நாம் அவர்களுடன் இருக்கிறோம். அவர்களது போராட்டத்தில் வெற்றி பெறுமவரை நமது தார்மக, அரசியல், ராஜிய உதவிகள் அவர்களுக்குக் கிடைத்துக்கொண்டே இருக்கும். பயங்கரவாதம், தீவிரவாதம், பிரிவினைவாதத்துக்கு இடையே பாகிஸ்தானை ஒரு மதவாத முஸ்லிம் நாடாக மாற்ற மக்கள எனக்கு ஆதரவு அளிக்கவேண்டும் என முஷாரப் கூறினார். (து)

# லெபனானில் குண்டுவெடிப்பு

(பெய்ரூட்)

லெபனானில் வெடிகுண்டு வெடித்ததில் மூன்று பேர் பலியாயினர். இந்தியர் உட்பட பலர் காயமடைந்தனர்.

லெபனான் தலைநகர் பெய்ரூட் அருகே காஸ்லிக் என்ற இடம் உள்ளது. கிறிஸ்தவர்கள் அதிகம் வசிக்கும் பகுதி இது.

இங்குள்ள வர்த்தக வளாகத்தில் நேற்றுமுன்தினம் காலை பயங்கர வெடிகுண்டு வெடித்தது. இதில், மூன்று பேர் கொல்லப்பட்டனர். இந்தியர் ஒருவர் உட்பட பலர் காயமடைந்தனர்.

கடந்தவாரம வெள்ளிக்கிழமை இதே பகுதியில் வெடிகுண்டு வெடித்த சம்பவத்தில் 11 பேர் காயமடைந்தனர். இந்த வெடிகுண்டு சம்பவத்துக்கான காரணமும், யார் இதைச் செய்தது என்ற விவரமும் தெரியவில்லை. (து)



# ஐரோப்பிய யூனியன் தலைவர்களின் 2 நாள் பொருளாதார மாநாடு

ஐரோப்பிய யூனியன் தலைவர்களின் இரண்டுநாள் பொருளாதார மாநாடு பிரஸல்சில் (பெல்ஜியம்) கடந்த செவ்வாய்க் கிழமை தொடங்கியது.

இதில் பங்கேற்ற தலைவர்கள் பலரும் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

ஐரோப்பிய யூனியனை வரும 2010ஆம் ஆண்டுககுள சவால்மிக்க பொருளாதாரச் சக்தியாக மாற்றுவது என்று 5 ஆண்டுகளுக்கு முன்னர் லிஸ்பன் மாநாட்டில் முன் வைக்கப்பட்ட கொள்கையை மீண்டும் பரிசீலிப்பது பற்றி இந்த மாநாட்டில் விவாதிக்கபபடும். புதிய வடிவில் இந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது பற்றி பரிசீலிக்கப்படும் என்று ஐரோப்பிய யூனியன் கமிஷனின் தலைவர் ஜேஸ் மானுவேல் பரோசா கூறியுள்ளார். ஐரோப்பிய நாடுகளில் நிலவும் அரசியல் சூழ்நிலைகள் மற்றும் இதர பிரச்சினைகள் பற்றியும் இம்மாநாட்டில் விவாதிக்கப்படும என்றும பரோசா குறிப்பிட்டார்.

இதுதவிர சீனாவுக்கு ஐரோப்பிய யூனியன் விதித்துள்ள 16 ஆண்டுகால ஆயுதத்தடை பற்றியும் அதன் எதிர்காலம் குறித்தும இந்த மாநாட்டில் விவாதிக்கப்படும் என்று தெரிகிறது. (து)

பாகிஸ்தானின் தேசிய தினம் நேறறு முன்தினம் கொண்டாடப்பட்டது. இதில் பங்கேற்பதறகும், தலிபான தொடர்பாக பேசுவதற்கும வந்த ஆப்கான அதிபர் அமீர்க சாயை, பாக. அதிபர் முஷாரப் வரவேற்ற காட்சி.



# தற்கொலை செய்ய முயன்றது ஏன்?

## ஆர்த்தி அகர்வால் பேட்டி

பிரபல தெலுங்கு நடிகை ஆர்த்தி அகர்வால் நேற்றுமுன் தினம் விஷம் அருந்தி தற்கொலை முயற்சியில் ஈடுபட்டதையடுத்து ஹைதராபாத் அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார.

விஷம் குடித்து தற்கொலைக்கு முயன்ற ஆர்த்தி அகர்வால் சிகிச்சைக்குப் பிறகு உயிர் பிழைத்தார். மாலையில் அவர் மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் ஆனார்.

நேற்றுமுன்தினம் மாலை ஆர்த்தி தற்கொலை முயற்சியில் ஈடுபட்டதன் காரணத்தைச் செய்தியாளர்களிடம் விளக்கினார்.

"நான் விஷம் குடித்ததற்குக் காதல் காரணம் அல்ல. என்னைப்பற்றி தருணுடன் இணைத்து மீடியாக்களில் கிசுகிசுக்கள் வருகின்றன. அது என் மனதைப் பாதித்தது. இதனால் மனம் உடைந்து விஷம் குடித்தேன்.

நான் வெங்கடேஷ், சிரஞ்சவி போன்ற பிரபல நடிகர்களுடன் ஜோடியாக நடித்திருக்கிறேன். அதுபோல் தருணும் எனக்கு ஒரு சக நடிகர். அவருடன் மட்டும் ஏன் என்னை இணைத்து காதல் கிசுகிசு எழுதவேண்டும" என்றார்.

நடிகை ஆர்த்தி அகர்வால் தற்கொலை செய்ய முயன்றதற்கு உங்கள் மீது வைத்திருந்த காதலில் ஏமாற்றமடைந்ததுதான் காரணம் என்று கூறப்படுகிறதே என நடிகர் தருணிடம் கேட்டபோது,

எனக்கு நடிகைகள் திரிஷா, ஷ்ரயா போன்றவர்கள் நல்ல நண்பாகள். அதுபோல்தான் ஆர்த்தி அகர்வாலும் எனக்கு நல்ல நணபர். அவருடன் எனக்குக் காதல் இல்லை. எல்லாம் வெறும் வதந்தி என்றார். (து)



நடிகர் தருணுடன் நடிகை ஆர்த்தி தோன்றும காட்சியையும், தற்கொலை முயற்சிக்குப் பின் தந்தை அரவணைப்பில் ஆர்த்தி வீடு திரும்புவதையும் படத்தில் காணலாம்.



பாகிஸ்தான் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட 568 இந்தியர்கள் நேற்று முன் தினம வாகா எல்லை வழியாக நாடு திரும்பினர். இவர்களில் 529பேர் பாகிஸ்தான் கடல் எல்லையில் மீன் பிடித்ததாகக் கூறி பாகிஸ்தான் அரசால் கைதுசெய்யபபட்டவர்கள். தண்டனைக் காலம் முடிவடைந்து நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்ட மீனவர்கள் தாயகம் திரும்பக் காத்திருந்தபோது.

# ரோஜாப்பூ பறித்த சிறுவனை அடித்துக் கொன்ற அரக்கி

உத்தர பிரதேசத்தில் ரோஜாப்பூ பறித்ததற்காக சிறுவனொருவனைத் தோட்டத்தின் சொந்தக்காரப் பெண் அடித்துக் கொன்றார்.

உத்தர பிரதேச தலைநகர் லட்சுமணபுரியைச் சேர்நத 5 வயது சிறுவனான இம்டியாஸ் கடந்த சில தினங்களுக்கு முனனர் தனது நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தபோது ஒரு வீட்டுத் தோட்டத்தில் பூத்திருந்த ரோஜாப்பூவை ஆசையாகப் பறித்துவிட்டான்.

இதை அரக்ககுணம் படைத்த வீட்டு எஜமானி மாயா பார்த்துவிட்டாள். வீட்டிலிருந்து ஓடிவந்து சிறுவனைப் பிடித்து அவனது ஆடைகளை உரிந்து கைத்தடியால் சரமாரியாக அடித்து உதைததாள். இதில் சிறுவன் பரிதாபமாக உயிரிழந்தான்.

இந்தச் சம்பவம் உத்தர பிரதேசத்தில் பெரும் பரபரப்பை ஏறபடுத்தியுள்ளது.

சமபவத்திற்குக் காரணமான அரக்கி மாயா தலைமறைவாகிவிட்டாள். அவளை பொலிஸார் வலைவீசித் தேடி வருகின்றனர். (து)

# கல்விக்கு வயது தடையல்ல 70 வயது கிழவரின் சாதனை

மேற்கு வங்கத்தின் பர்கானா மாவட்டத்தில் பேரன், பேத்தி எடுத்த 70 வயது முதியவர் கடந்த செவ்வாய்க்கிழமை பிளஸ் 2 தேர்வு எழுதினார். ராமச்சந்திர வைத்யா என்ற இந்த 70 வயது மாணவர் சரியா என்ற பகுதியில் உள்ள ஒரு மேல்நிலைப்பள்ளியில் தேர்வு எழுதினார்.

இவர் தேர்வு எழுதும் அறைககு நுழைந்தவுடன் மற்ற மாணவர்கள் இவரை தமக்கு தேர்வு நடத்த வந்த மேற்பார்வையாளர் எனத் தவறாக நினைத்துக்கொண்டனா. ராமச்சந்திர வைத்யா அரசுப் பணியில் இருந்து 12 வருடங்களுககு முன்பு ஓய்வுபெற்றவர்.

ஓய்வுக்குப் பின்னர் அதிக நேரம் கிடைத்ததால் பிளஸ் 2 தேர்வு எழுத முடிவெடுத்ததாகக கூறினார். கல்விக்கு வயது ஒரு தடையல்ல; பட்டதாரி ஆவதே தனது விருப்பம் என்கிறார் இந்த 70 வயது மாணவர். (து)

WORLD NEWS உலக தரிசனம்



பாட்னாவைச் சேர்ந்த மாணவிகள் ஹோலிப் பண்டிகையையொட்டி வண்ண வண்ணப் பொடிகளை ஒருவர் முகத்தில் மற்றொருவர் பூசி மகிழ்ந்த காட்சி.

# ஐயங்கள் ஆயிரம்


## மழைநீரில் மறைந்திருப்பவை

மழையில் நனைவதால் காய்ச்சல் வருகிறது. குளித்தால் காய்ச்சல் வருவதில்லையே ஏன் தெரியுமா?

மழை நர் சுத்தமான நீர் இல்லை. நகரங்களில் உள்ள காற்று சுத்தமாகவா இருக்கிறது? நோயாளிகளின் மூச்சுக் காறறிலிருந்து வெளிப்படும் வைரஸ்களும், சளிகாய்ச்சல் பக்டீரியாக்களும் காற்றில் கலந்துதான் இருக்கின்றன. மழை பெய்யும்போது காற்றில் உள்ள தூசி, புகை, கிருமி, விஷவாயுக்கள், தாவரங்களின் மகரந்தம் என்ற ஏசுப்பட்ட பொருட்கள் மழைநீரில் கலந்து, கரைந்து வருகிறது. அதில் நனைவதால் அலர்ஜியும், மூச்சு சமந்தமான நோய்களும் ஏற்படத்தானே செய்யும்.

மழைக்காற்றில் ஈரம் மிகுவதால், வழக்கத்தைவிட அதிகளவில் கிருமிகள் சுறுசுறுப்புடன் பரவும். மலைக்காடுகளால், அருவிகளல் கொட்டும் மழையும், நீரும் நகர அசுத்தங்களிலிருந்து விடுபட்டிருப்பதால் அந்த நீரில் குளிப்பதால் ஆபத்து ஏற்படுவதில்லை.

# தினம் சாப்பிடுங்கள் ஒரு அப்பிள்; உடல் பராமரிப்பு வெரி சிம்பிள்!



கிரேக்க மருத்துவ அறிஞர் ஹிப்பாக்ரேட்ஸ், உணவே மருந்து என்ற கொள்கையில பிடித்தம் கொண்டவர். நோர்வே இரசாயன வல்லுநர் ரோசின், நம் உடலுக்கும், மனதுக்கும நல்ல வளர்ச்சியைக் கொடுக்கும் இரசாயனங்கள் என்னென்ன என்பதைக் கண்டறிந்தார். மனித உடலில் பிரதான இராசாயனக குறைபாடுகள் ஏற்படும்போதுதான் உடல் ரீதியான நோய்களும், மனரீதியான நோய்களும் ஏற்படுகின்றன என்பதைக் கண்டறிந்தார். உதாரணமாக கலசியம், சிலிக்கன், சல்பர் குறைபாடுகள் ஏற்பட்டால் கோபம் அதிகரிக்கும்.

மேற்சொன்ன அறிஞர்கள் இருவருமே கண்டறிந்த உண்மைகளின்படி, ஆரோக்கியமான உணவு, உடற்பயிற்சி, உடல் உபாதைகள் குறித்த உடனடி பரிசோதனை, சூரிய சக்தி மற்றும் நேர்மறையான எண்ணங்கள் ஆகியவை ஒரு மனிதனின் வாழ்க்கை சீரான முறையில் இயங்க உதவுகின்றன.

இயற்கையான உள்வளர்ச்சி அற்ற (இன் ஆர்கானிக்) உணவுகளை அருந்துவதைவிட, உள்வளர்ச்சி உள்ள (ஆர்கானிக்) உணவுகளை அருந்துவதே உடலுக்கு நல்லது என்று ரோசன் கண்டறிந்தார். உதாரணமாக, தைராய்டு குறைபாடுள்ள நபர்கள், அயோடின் கலந்த உப்பைச் சாப்பிடுவதைவிட, அயோடின் அதிகம் உள்ள உணவு வகைகளைத் தினம் சாப்பிட்டுவந்தால், நாளடைவில் குறைபாடுகளை நீக்கிவிடலாம் என்று கண்டறிந்தார். காளான், கீரை வகைகள், ஒட்ஸ் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றைத் தினமும் உணவில் சேர்த்துக்கொள்ளவேண்டும். இப்படி இருவரும் பல மருத்துவ உண்மைகளைக் கண்டறிந்து கூறியுள்ளனர். அவர்கள் கூற்றுப்படி, அப்பிளில் என்னென்ன சத்து உள்ளது என்று காண்போம்.

**அப்பிள் :**

அல்கலைன் வகை உணவு இது. பெக்டின் நிறைந்து காணப்படுவதால், குடலில் அதிக நீரை நீக்கி, உடல் கழிவை எளிய முறையில் வெளியேற்ற உதவுகிறது. அப்பிளில் இரும்புச்சத்து அதிகம் இல்லை. ஆனால், நாம் சாப்பிடும் இரும்புச்சத்து அதிகமுள்ள உணவுவகைகளிலிருந்து இரும்புச்சத்தை எளிதாக உடலில் ஈர்த்துக்கொள்ள அப்பிள் உதவுகிறது. கல்சியம் அதிகம் அப்பிளில் உள்ளது.


பெண்கள் தினமும் ஒரு அப்பிள் சாப்பிடுவது நல்லது. விற்றமின் 'ஏ'சத்து அப்பிளில் அதிகம். சளி, தொற்று ஆகியவை ஏற்படாமல் தடுக்க அப்பிள் உதவுகிறது. கண்ணைப் போற்றிப் பாதுகாப்பது அப்பிளின் பிடித்தமான வேலை.

விற்றமின் 'ஜி' சத்து இதில் அதிகம் உள்ளதால், ஏற்கனவே கூறியபடி ஜீரண சக்தியை அப்பிள் அதிகரிக்கிறது. விற்றமின 'சி' சத்து அப்பிளில் உள்ளதால் எலும்பு, பற்களை உறுதியாய் பாதுகாக்கிறது. நரம்பு மண்டலத்தைப் பாதுகாக்கும் விற்றமின் 'பி' சத்தும் இதில் அதிகம். இரத்தத்தைச் சுத்திகரிக்கும் வேலையையும் அப்பிள் செய்கிறது. குறைந்த இரத்த அழுத்தம் உள்ளவர்கள் அப்பிள் சாப்பிட்டால், இரத்த ஓட்டம் சீராகும்.

அப்பிளைத் தண்ணீருடன் கலந்து ஜூஸ் போல குடித்தால், எனிமா கொடுக்காமலேயே கழிவு வெளியேறும். அப்பிளை ஜூஸ் செய்தால், உடனே குடித்துவிடவேண்டும். அப்பிள் தோலைக் காயவைத்து ரீ போட்டுக் குடித்தால் கிட்னி நன்கு வேலை செய்யும்.


**அப்பிளில் கிடைக்கும் சத்து அளவுகள :**

கலோரி 258, புரோட்டீன் 1.2 கிராம், கொழுப்பு 1.6கிராம், கார்போஹைற்ரேட் 59.6கிராம், கல்சியம் 25 மில்லி கிராம், இரும்புச் சத்து 1.2 மில்லி கிராம், விற்றமின் ஏ 360 ஐ.யு, தையாமின் 0.15 மில்லி கிராம், ரிபோபிளாவின 0.08 மில்லி கிராம், அஸ்கார்பக் அமிலம் 18 மில்லி கிராம்.



புதுடில்லியில் பிளாட்பார வாசிகளுக்குச் சொந்தமான நாயும், குரங்கும் ஒற்றுமையுடன் ஒன்றின்மேல் ஒன்று உறங்குவதைப் படத்தில் காணலாம்.

# குறுக்கெழுத்துப் போட்டி இல-52



*அனுப்ப வேண்டிய முகவரி-*

**குறுக்கெழுத்துப் போட்டி இல ~ 52**

**'வலம்புரி - சங்குநாதம்'**

**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

*முழுப் பெயர்* :- ..................................................

*முகவரி* :- ..................................................

..................................................

..................................................

*இங்கே வெட்டுக* ------------------------------------------

***மேலுள்ள கூப்பனில் விடைகளை நிரப்பி எதிர்வரும் 31ஆம் த்கதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.***

## இடமிருந்து வலம்

(1)அண்மையில் பல நாடுகளை உலுக்கிய இயற்கை அனர்த்தம். (3)சத்திரம் என்றும் சொல்வார்கள் (குழம்பியுள்ளது). (5)ஒரு உணவுப பண்டம். (6)குரங்கு - இப்படியுமழைப்பர். (7)தமிழகத்தில் அரிவாளுக்கு மிகவும் பிரசித்திப்பெற்ற ஊர் (ஒரு திரைப்படத்தின் பெயர்). (10)நீர்த்தன்மை உள்ளவற்றையெல்லாம் இப்படிச் சொல்வார்கள் (திரும்பி வருகிறது). (12)ஒரு நட்சத்திரம்.

## மேலிருந்து கீழ்

(1)ஒவ்வொரு நாட்டிற்கும் இது கிடைத்துவிட்டால் மகிழ்ச்சிதான். (2)உலகம் (கீ.மே). (4)உயரமான மலைகளை இப்படியும் அழைப்பார்கள்(கீ.மே). (8)பெண் விடுதலைக்காக கவி பாடிய மாபெரும் கவிஞர். (9)நான்கு வாரங்கள் சேர்ந்தால் வருவது. (11)புராணகாலத்து அழகி.

## குறுக்கெழுத்துப் போட்டி இல.50 இன் விடைகள்

### இடமிருந்து வலம்

1.பகவத்கீதை 4.ராசி 7.மல்லாவி 8.குரு 10.பால் 11.அகழி 14.வலை 15.பேதை

### மேலிருந்து கீழ்

1.பல்லாங்குழி 2.வயல் 3.ராதை 5.சிரம(ம்) 6.புலால் 7.பாவி 9.கரு 12.அலை 13.சிதை

## பரிசு பெற்றோர் பெயர் விபரம்

| | | |
|---|---|---|
| **முதற் பரிசு** | :- | **சி.தயாளினி<br>நீர்வேலி வடக்கு,<br>நீர்வேலி.** |
| **இரண்டாம் பரிசு** | :- | **தெ.மனோகரன்<br>புகையிரத நிலையவீதி,<br>கோண்டாவில்.** |
| **மூனறாம் பரிசு** | :- | **திருமதி சி.ஜெயந்தி<br>மாலியவத்தை,<br>சங்கானை.** |

**போட்டியில் கலந்துகொண்டு பாராட்டுபெறும் அதஷ்டசாலிகளன் பெயர் வபரம்**

வ.மன்னா் அன்ரனி, குருநகர். பா.ஞானவேல், யாழ்ப்பாணம். கே.அரசேஸ்வரன், யாழ்ப்பாணம். சி.சங்கீதா, சி.சம்பூரணீ, வட்டுக்கோட்டை. என்.ஜே.இரத்தினதயா, ஏழாலை. செ.கிருஷ்ணராசா, துணுக்காய். கே.இராஜகோபால், வட்டுக்கோட்டை. வே.குமாரசுவாமி, கரவெட்டி. யோ.கலாரஞ்சினி, சாவகச்சேரி. K.கனகசபாபதி, தம்பசிட்டி. இ.இளமதி, உடுவில். க.கபிலன், நீர்வேலி. ஞா.இராஜோதயன், தெல்லிப்பளை. த.தியாகராசா, கோண்டாவில். தி.வயனரூபி, யாழ்ப்பாணம்.

# மீள்பார்வை

## பிறியானி விஜேசேகர எழுதிய

# இலங்கையில் பாராளுமன்ற வழக்கம்

(தமிழாக்கம் : ஆர்.எஸ். வேதநாயகம்) 17



### அத்தியாயம் VI

*இடையீடுகள்*

உறுப்பினரொருவர் உரையாற்றிக் கொண்டிருக்கும் வேளையில் ஏனைய உறுப்பினர்கள் மௌனமாக இருக்கவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர். எனினும் உரையாற்றுகின்ற உறுப்பினர் இட மளித்தால் இடையீடு செய்வதன் மூலம் தெளிவு படுத்தல்களைக் கோரலாம் அத்தகைய இடை மறிப்புகள் சுருக்கமானவையாகவும் தொடர்புடையனவையாகவும் அரிதாகச் செய்யப்படுபவையாகவும் இருக்கவேண்டும்.

*எஞ்சிய அதிகாரங்கள்*

நிலையியற் கட்டளை 136 இன் கீழ் சபாநாயகர் ஏற்பாடு செய்யப்படாத விடயங்கள் அனைத்திலும் பாராளுமன்ற அலுவலை நடாத்தும் முறையை ஒழுங்கு படுத்தலாம். எனவே ஏதேனும் விடயம் பற்றிய ஏற்பாடு இருக்குமிடத்து இன்றியமையாதவாறு அவர் அதனைக் கண்டிப்பாகப் பின்பற்றவேண்டும். 142 ஆம் நிலையியற் கட்டளையும் ஒத்த அதிகாரங்களைச் சபாநாயகருக்கு வழங்குகின்றது. இந்நிலையியற் கட்டளையின் கீழ் சபாநாயகர் தமது அதிகாரத்தைப் பயன்படுத்திக் கடந்த காலங்களில் தனிப்பட்ட விளக்கங்கள் தொடர்பான கையெழுத்துப் பிரதிகள் 23 ஆம் நிலையியற் கட்டளையின் காப்புவாசகத்தின் கீழான கூற்றுகள் அமைச்சுக் கூற்றுகள் ஆகியவற்றைத் திருத்தியமைத்துள்ளார். ஒத்தவகையில் சபாநாயகர் இந்நிலையியற் கட்டளைகளின் கீழ் செயற்படுபவராக கடந்த காலங்களில் சட்ட மூலம் ஒன்றின் குழு நிலை நடவடிக்கையின் போது நேரத்தை சில நிமிடங்கள் நீடிப்பதன் மூலம் நேரத்தை ஒழுங்குபடுத்துவதற்கு சபையின் கூட்டு உரிமையை பயன்படுத்தி யுள்ளார். ஒரு சந்தர்ப்பத்தில் மதியம் 12 மணிக்குப் பின்னர் செயற் பட்ட முழுப்பாராளுமன்றக் குழுவின் அமர்வு 7ஆம் நிலையியற் கட்டளைக்கு இணங்கியதல்லவெனச் சார்த்தப்பட்டதுடன் மதியம் 12 மணிக்குப் பின்னர் இடம்பெற்ற நடவடிக்கையெதுவும் வலுவற்றதாக்கப்படவேண்டுமென்றும் முன்மொழியப்பட்டது. இப்பிரச்சினையில் தீர்ப்பு வழங்கிய சபாநாயகர் எடுத்துக்கொள்ளப்பட்ட அலுவலைச் சபையின் திட்டவட்டமான ஒப்புதலுடன் இந்நேரத்துக்கு அப்பால் தொடர்தல் பல ஆண்டுகளாகச் சபையின் வழக்கமாக இருந்து வந்துள்ளதெனக் குறிப்பிட்டார். அச் சந்தர்ப்பத்தில் பிற்பகல் 12.45 மணிக்குச் சபை இடைநிறுத்தப்படும்வரை அமர்வு தொடரப்படுவதற்கு ஆட்சேபனையெதுவும் தெரிவிக்கப்படவில்லை. இங்கு மதியம் 12 மணிக்குப் பிந்திய நடவடிக்கைகளைச் செல்லுபடியற்றதென அறிவிப்பதற்குத் தேவையான அதிகாரம் சபாநாயகருக்கு அளிக்கப்பட்டுள்ளதாவென்ற கேள்வி எழுந்தது. அதற்குத் தேவையான அதிகாரத்தை அளிக்கின்றனவாக 136 ஆம். 142 ஆம் நிலையியற் கட்டளைகள் குறிப்பிடப்பட்டன. எனினும் பாராளுமன்றத்தின் நடவடிக்கைகளை வெற்றானவையாகவும் வறிதானவையாகவும் பிரகடனப்படுத்தும் அதிகாரத்தை இவ்விரு நிலையியற் கட்டளைகளும் தமக்களிக்கவில்லையென்பதே சபாநாயகரின் கருத்தாயிருந்தது எனவே சபையின் சொந்த நடவடிக்கைகளின் சட்டபு,ர்வமான தன்மையைத் தீர்மானிக்கவேண்டிய தனியொரு நீதிபதி சபையேயென்றும் பாராளுமன்ற நடவடிக்கை எதனையும் செல்லுபடியாக்குவதற்கான அல்லது செல்லுபடியற்ற தாக்குவதற்கான அதிகாரம் சபைக்கு மட்டுமேயுள்ள ஓர் அதிகாரமென்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

சட்டமா அதிபர் எதிராக சமரக்கொடி வழக்கில் சபையின் நடவடிக்கைகளைச் செல்லுபடியற்றதாக்கக் கூடிய பொருத்தமான ஒரேயொரு வழிமுறை பாராளுமன்ற அன்றாட நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்தும் சபையின் கூட்டக் குறிப்புகளிலிருந்தும் நடவடிக்கைகளை நீக்கும்படியான பிரேரணையொன்றைச் சபையில் தானே நிறைவேற்றுவதன் மூலமென்று கூறப்பட்டது அத்தகைய நிலைமைகளில் எவ்விதத்திலும் ஆட் சேபனையெதுவும் எழுப்பப்படாதபோது மட்டும் சபை மௌனமாக ஒப்புதலளிக்கின்றதென ஊகிக்கப்படலாம்.

### அத்தியாயம் VII

*விவாத விதிகள்*

நிலையியற் கட்டளைகள் 78 முதல் 85 வரையில் உள்ளவற்றிலுள்ள விவாத விதிகளைச் செயற்படுத்த வேண்டியது சபாநாயகரின் கடமையாகும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்டபாடுகளுக்கிணங்க விவாதங்கள் உரிய முறையில் நடத்தப்படுதலை உறுதிப்படுத்தும் பொருட்டு இவ்விதிகளைச் செயற்படுத்துவதில் சபாநாயகரின் அனுபவம் மிக முக்கிய ஒரு கருவியாக விளங்குகின்றது.

*உரையாற்றுதல்*

உரையாற்றுகின்ற ஓர் உறுப்பினர் எழுந்து நின்றவாறு சபையை நோக்கி உரையாற்றவேண்டும். எனினும் உடல் நலங்குன்றிய ஒருவர் அமர்ந்தவாறு உரையாற்ற அனுமதிக்கப்படலாம். ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஓர் ஒலிவாங்கி வழங்கப்பட்டுள்ளதுடன் உரைகள் அவை ஆற்றப்படுகின்ற மொழியிலிருந்து ஏனைய இரு மொழிகளுக்கும் சம காலத்தில் உரைபெயர்க்கவும்படுகின்றன. ஒரு பிரேரணையைப் பிரேரிப்பதற்கும் பின்னர் அதற்குப் பதிலளிப்பதற்குமாக இரு தடவைகள் உரையாற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள அரசாங்க அமைச்சர் ஒருவரைத் தவிர வேறெந்த உறுப்பினரும் ஒரே பிரேரணை மீது ஒரு தடவைக்கு மேல் உரையாற்ற முடியாது எனினும் முழுப் பாராளுமன்றக் குழுவில் ஒரு தடவைக்கு மேல் உரையாற்றுவதற்கு உறுப்பினரொருவர் அனுமதிக்கப்படலாம். தீர்மானமொன்றைப் பிரேரிப்பவரும் ஏனைய உறுப்பினர்கள் அதனைப் பற்றிப் பேசுவதற்கு வாய்ப்பளித்த பின்னர் பதிலளித்துப் பேசலாம் ஒவ்வொரு உறுப்பினருக்கும் சபாமண்டபத்தில் ஓர் ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளது. பேசுவதற்கு அவர் கண்டு கொள்ளப்படவேண்டுமாயின் அவ்வாசனத்திலிருந்து தான் அவர் எழுந்து நிற்க வேண்டும்.

*சபாநாயகரின் பார்வையும் சபாநாயகரின் நிரலும்*

ஒரே நேரத்தில் இரு உறுப்பினர்கள் உரையாற்ற எழுந்தால் முதலில் தம் பார்வையில் பட்ட உறுப்பினரை உரையாற்றும்படி சபாநாயகர் அழைக்க வேண்டும். ஒழுங்கு செய்யப்பட்ட பேச்சாளர்களின் நிரலொன்று இருக்குமிடத்துத்தலைமை தாங்கும் அலுவலர் வழமையாக அரசாங்கத்தினதும் எதிர்க்கட்சியினதும் நிரல்களில் தரப்பட்டுள்ள ஒழுங்கைப் பின்பற்றுவார் எனவே அந்தந்த முதற் கோலாசான்களால் நிரல்கள் தயாரிக்கப்படுகின்றன. ஆயின் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரிசை முறையொன்று இல்லாதபோது பேச்சாளர்களைத் தெரிவு செய்கின்ற தற்றுணிவு அவருக்குண்டு.

*பொருத்தமும் கூறியது கூறலும்.*

மரபுகளில் பெருமளவுக்கு ஏளனமாகப் பின்பற்றப்படும் மரபு இதுவே உறுப்பினர்கள் விவாதிக்கப்படும் விடயத்துக்குப் பொருத்தமானவற்றைப் பேசவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றனர். எனினும் இவ் விடயத்தில் ஒரு பரந்த எல்லை அனுமதிக்கப்படுகின்றது. ஓர் உறுப்பினர் விவாதப் பொருளுக்குப் பொருத்த மற்றவற்றை விடாப்பிடியாகப் பேசிக் கொண்டிருந்தால் அல்லது சலிப்பு,ட்டும் வகையில் கூறியதையே திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருந்தால் சபாநாயகர் அவ்வுறுப்பினரின் உரையை நிறுத்துமாறு பணிப்பதற்கு நிலையியற்கட்டளை 73 ஏற்பாடு செய்கின்றது.

(தொடரும்)

# செய்தித் துளிகள்

## விசேட பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

உயர்தேசிய கணக்கியல் வர்த்தக முகாமைத்துவ பட்டதாரிகள் சங்க விசேட பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 10. மணிக்கு யாழ்ப்பாண உயர் தொழில் நுட்ப நிறுவன பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு தற்போது பட்டதாரி பயிற்சியில் ஈடுபட்டுள்ள உயர் தேசிய கணக்கியல், வர்த்தக முகாமைத்துவ பட்டதாரிகளும் மற்றும் தற்போது நிறுவனத்தில் இருந்து வெளியேறிய உயர் தேசிய கணக்கியல் வர்த்தக முகாமைத்துவ பட்டதாரிகளும் தவறாது சமுகமளிக்குமாறு உயர் தேசிய கணக்கியல் வர்த்தக முகாமைத்துவ பட்டதாரிகள் சங்கத்தலைவர் வி. தயாபரன் கேட்டுள்ளார்.

அன்றைய தினம் பதிவு செய்யப்படாத உயர்தேசிய கணக்கியல் வர்த்தக முகாமைத்துவ பட்டதாரிகள் பதிவும் இடம்பெறவுள்ளது. (ச)

## மகாநாடு

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய சோசலிச கட்சியின் பிரதிநிதிகள் மகாநாடு இன்றும் நாளையும் ரத்மலாணைகம் கருசெவன மண்டபத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

கட்சியை சம்பந்தப்படுத்தும் தொழிலாளர் அகில உலக கமிட்டி சகோதர தலைவரான இங்கிலாந்து சோசலிச கட்சியின் பிரதம செயலாளர் பீற்றர் டெப் ,மன்றும் இந்தியா பாகிஸ்தான் உட்பட்ட நாடுகளில் சர்வதேச பிரதிநிதிகளும் இந்த மகாநாட்டில் கலந்துகொள்வார்கள். (க)

## பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை நிர்வாக சேவைக்கான (slas) போட்டிப்பரீட்சை எதிர்வரும் ஏப்ரல் 2ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அதற்கான இடைநிறுத்தி வைக்கபட்ட பயிற்சி வகுப்புகள் மீண்டும் இன்று காலை 9.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

பரீட்சைக்கு தோற்றவிருக்கும் பரீட்சார்த்திகள் அனைவரும் இதில் பங்குபற்றுமாறு அரச சேவை பட்டதாரிகள் சங்கச் செயலாளர் கு. சற்குணராஜா கேட்டுள்ளார். (ச-4)

## விளையாட்டுப் போட்டி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச மட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான இவ்வருட குழுப்போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

அந்த வகையில் [illegible] இன்றும் நாளையும் நாளை மறுதினமும் வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டப் போட்டிகள் இடம்பெறவுள்ளது.

இப்போட்டிகள் யாவும் யா/ஊர்காவற்றுறைபுனித அந்தேனியார் கல்லூரி மைதானத்தில் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க75)

## ஒளிராத மின்விளக்கு

பருத்தித்துறை ஓடக்கரை வீதி, வெள்ள வாய்க்கால் ஒழுங்கைக்கு முன்னால் பொருத்தப்பட்டுள்ள மின்விளக்குகள் பல மாதங்களாக ஒளிராத நிலையில் உள்ளதாகவும் இதனால் விபத்துக்கள் அடிக்கடி ஏற்படுவதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (து-104)

## கட்டடம் அமைப்பு

யா/ஊர்காவற்றுறை சின்னமடு ரோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் நிக்கொட் உதவியுடன்வகுப்பறைக் கட்டடமொன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

இப்பாடசாலையில் 80 அடி நீளமான வகுப்பறைக்கட்டடம் 13 இலட்சம ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது. (க-75)

## வீதி திருத்தம்

(முல்லைத்தீவு)

மாந்தை கிழக்குப் பிரதேச செயலகப்பிரிவில் நீண்ட காலமாக திருத்தப்படாதிருந்த பல வீதிகள் 2002 ஆம் ஆண்டுக்குரிய முன்னேற் பாட்டு நீதியான 20 இலட்சம் ரூபா செலவில் திருத்தப்பட்டுவருகின்றது. பாலிநகர்-சிவபுரம் வீதி கரும்புலியான் வீதி கல்லிருப்பு வீதி பாண்டியன்குளம் வீதி ஆகியனவே திருத்தப்பட்டு வருகின்றன.

மேலும் பாண்டியன் குளம் விளையாட்டு மைதான வீதியும் பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியான 2இலட்சத்து30 ஆயிரம்ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.(து-128)






குருநகர் புனித கார்மேல் அன்னையின் ஆலயத்தில் தவக் காலத்தை முன்னிட்டு இயேசுவின் பாடுகளை நினைவு கூரும் முகமாக வைக்கப்பட்டிருக்கும் சில காட்சிகள். (படங்கள்:நோயல்)

# இயற்கை சக்திகளை இறைஞ்சிடுவோம்

இறைவனால் சிருஷ்டிக்கப்பட்ட இப்புவனத்திலே அவனுக்கு ஈடிணையாக இருக்கின்ற வல்லமைத் தாய்களென இயற்கைச்



சக்திகள் போற்றப்படுகின்றன. அண்ட சராசரங்களையும் தன்னுள் அடக்கியும் ஒடுக்கியும் அழித்தும் காத்தும் அருளும் ஆண்டவன் படைப்பின் மகத்துவம் இயற்கை.

இது ஆன் மாக்களுக்காக ஆன்மீக நோக்கிலும் அனுதாப நோக்கிலும் ஆண்டவனால் அருளப்பட்ட சேவைக்கூடம். இவ் இயற்கைச் சக்திகளை ஐம்பது தங்கங்களிலும் பிரசவித்த பிரகிருதிப் பொருளான இறைவன் அவற்றை இயக்கி ஆளவல்ல இயங்கு நிலைக்கு அப்பாற்பட்ட பொருளாக தன்னை முகமூடிபோட்டுக் கொள்கின்றான்.

இப்படிப்பட்ட இறைவன் வீசு தென்றல, நீல விசும்பு தீப்பொறி, பரந்தபூமி, புனல் என பல் நிலைப்பட்ட சக்திகளை தனக்கு உடைமையாகக் கொண்டிருக்கின்றான். அம்பலத்தில் ஆனந்தத் தாண்டவமாடும் ஆடல் வல்லானை நாம் அடிவணங்குவதுடன் அவனோடு சூழ வியாபித்திருக்கும் இயற்கைச் சக்திகளையும் இறைஞ்சுவது எம்மை இன்ப வாழ்விற்கு இட்டுச் செல்லும்.

இயற்கை வழிபாடு என்பது என்னவென்றே அறியாத இன்றைய சமூகத்தில் நாம் எமது முன்னோரின் வழிபாட்டு முறை நோக்கி சென்றோமானால், தான்

## வெள்ளி நற்சிந்தனை

தோன்றிய காலத்தை துல்லியமாக துணிய முடியாத சனாதன தர்மமாகிய இந்துமத வரலாற்றுப் போக்கின் தொன்மையான நாகரிகமென கொள்ளப்படும் சிந்துவெளி நாகரிககாலத்திலே வாழ்ந்த மக்கள் ஆண்தெய்வ வழிபாடு, பெண்தெய்வ வழிபாடு, விலங்கு வழிபாடு போன்ற வழிபாடுகளுடன் சூரிய வழிபாடு, நதிவழிவழிபாடு, மரவழிபாடு போன்ற இயற்கை வழிபாடுகளையும் மேற்கொண்டனர் என்பது அறியப்பட்ட உண்மை. ஓர் எருத் தலையுடன் காணப்படும்.

மயிர்கள் பொறிக்கப்பட்ட முத்திரையே இயற்கைச் சக்திகளில் ஒன்றான சூரிய வழிபாட்டை உறுதிப்படுத்துகிறது. கிளை விரிந்த விருட்சத்தின் அடியல் தலை அவிழ்ந்த நிலையில் காணப்படும் பெண்ணும் அவளின் முன் மண்டியிடும் பெண்களும் மரவழிபாட்டை மேற்கொண்டனர். புண்ணிய நதிகளைப் போற்றிடும் மக்களும் சிந்துவெளி காலத்தில் வாழ்ந்திருந்தனர். இவ்வாறு இயற்கை வழிபாடு தன்முனைப்போடும் அச்சத்தின் உச்சத்தோடும் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இவ்வாறு மரபுவழிவந்த இவ் வழிபாடு வேதகாலத்தில் ஒவ்வொரு இயற்கைச் சக்திகளுக்கும் ஒவ்வொரு தெய்வங்களை கற்பிதஞ் செய்யும் கொள்கையிலிருந்து பலகடவுட் கோட்பாடிற்கு வழிவகுத்தது.

வேதகாலத்தில் யாஸ்கர் என்ற அறிஞரால் இயற்கைத் தெய்வங்கள் விண்ணுக்குரியவை, மண்ணுக்குரியவை இடைவெளிக்குரியவை என வகைப்படுத்தப்பட்டு வழிபடப்பட்டது. சமுத்திரராஜனாக வருணனும் இடி, மழை, மின்னலுடன் தொடர்புடையவனாக இந்திரனும் நெருப்பின் தூதுவனாக அக்கினி தேவனும் வழிபடப்பட்டனர்.

இந் நிலையில் இயற்கையின் கொடூரங்கள் முற்றாக துண்டிக்கப்பட்டு அமைதியான அருள் வெள்ளம் மக்களுக்கு வழங்கப்பட்டது. ஆனால் காலப்போக்கில் சமூகத்திலே பொருளாதார அபிவிருத்தியில் ஏற்பட்ட மாற்றங்களாலும் விஞ்ஞானத்துறையின் வீறுகொண்ட வளர்ச்சியினாலும் மக்களின் வாழ்க்கை முறையில் மாற்றங்கள் ஏற்பட்டது.

போலிக்காக சில மக்களால் சில வம்சத்தினரால் உருவ வழிபாடு இடம்பெற்றதே தவிர இயற்கை வழிபாடு ஓரங்கட்டப்பட்டிருந்தது. இது பின்வந்த சமூக மாற்றங்களால் முற்றாக அற்றுப்போக இயற்கை வழிபாடு விஞ்ஞானமாக்கப்பட்ட ஒரு நிலையில் நகைப்பிற்குரிய. செயற்பாடாக கருதப்பட்டு முற்றாகவே அதன் வணக்கமுறை அற்றுப் போனது இயற்கை மீதான சுரண்டல்களும் தொடங்கியது. இதன் விளைவுதான் நாம் அண்மையில் எதிர் கொண்ட சுனாமி.

இவ்வுலகத்தின் இயக்கத்திற்காக படைக்கப்பட்ட ஜீவன்களின் ஆக்கிரமிப்புக்களை தாங்காத அன்னை அனல்பிழம்பாய் புனலுக்குள் கொதித்து பொங்கி எழுந்து சங்கடங்கள்

**சுகந்தினி முருகேசு**
**அச்சுவேலி தெற்கு**

புரிவதை நிறுத்த நாமெல்லாம் இயற்கைச் சக்திகளை இறைஞ்சிடுவோம். சிந்துவெளி நோக்கி சிறகடிக்கும் ஜீவன்களாய் இயற்றைத்தாயை இறைஞ்சிடுவோம் பணிவுடனே.

**பொங்கும் அமைதித் தாயே**
**திங்கள் போல குளிரும் - உமை**
**எங்கும் வாழ்த்திப் பாடிடுவோம்**
**- எமக்கு**
**தங்கும் சுகம் தாரீர்.** □

## மதிய உணவு வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வடமாநில இந்து மாமன்றத்தினால் வேலணை சரஸ்வதி வித்தியாலய மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படவுள்ளது.

ஏற்கனவே இம் மன்றத்தினால் மண்டைதீவு, மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 120 மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இம் மன்றத்தினால் கடந்த 14 ஆம் திகதி திங்கள்கிழமை வேலணை சரஸ்வதி வித்தியாலய மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளது. (க-19)

## 'சிவஜோதி' நூல் வெளியீடு

(பொன்னாலை)

இந்து கலாசார அமைச்சின் யாழ்.பிராந்தியப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் எழுதிய 'சிவஜோதி' நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 27 ஆம திகதி காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். மோகனதாஸ் கலந்து கொள்கின்றார்.

ஓய்வு பெற்ற அதிபரும் சைவப்புலவருமாகிய சு.செல்லத்துரை இந்நிகழ்வுக்கு தலைமை தாங்குவார். (க-49)

## சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கத்தின்

## எரிபொருள் விற்பனை நிலையம் விரைவில் நவீன மயப்படுத்தப்படும்

(தென்மராட்சி)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையத்தை ஒரு கோடி பத்து இலட்சம் ரூபா செலவில் நவீனமயப்படுத்தும் திட்டத்தினை ஆரம்பித்துள்ளது.

இந்த எரிபொருள் விற்பனை நிலையத்தில் நவீன வசதிகள் யாவும் கொண்டிருக்கும் எனவும் அதன் மூலம் எரிபொருள் நிரப்பும் வாகனங்கள் உடனுக்குடன் தமது சேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய நிலை ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழத்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா இரவிராஜ்ஜின் முயற்சியினாலேயே இந்த நவீன எரிபொருள் விற்பனை நிலையம் இயங்கவுள்ளதாக பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் க.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

இதே சமயம் சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தன் ஏற்பாட்டில் சாவகச்சேரி புகையிரத நிலைய வீதியில் வாகனங்கள் சுத்திகரிக்கும் நிலையம் ஒன்றும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிய வருகின்றது. (க-16)

# இராசி பலன்

**25.03.2005**
**பங்குனி 12, வெள்ளிக்கிழமை**
**பூரணை பின்னிரவு 3.16 மணிவரை**
**உத்தரம் பின்னிரவு 12.30 மணிவரை**
**இராகுகாலம் 10.15 - 12.45 மணிவரை**
**சுபநேரம் 6.15 - 7.45 மணிவரை**
**சித்தாமிர்தம், பங்குனி உத்தரம்**
**பூரணை விரதம்.**

| | |
|---|---|
| மேடம் | பகைவர் நேசம், காரிய அனுகூலம், தெய்வதரிசனம், போசன சுகம். |
| இடபம் | வியாபாரா சிந்தை, உறவினர் வெறுப்பு, எடுத்த காரியம் தாமதமாகும், சிறு வியாதி. |
| மிதுனம் | மனச்சஞ்சலம், புதிய விடயம், வேலைச் சுமை, முயற்சி தாமதம். |
| கடகம் | பிரயாண நன்மை, நல்ல தகவல், காரிய அனுகூலம், கீர்த்தி. |
| சிங்கம் | வாக்கு மேன்மை, தொழில் சிந்தை, மாதர் நட்பு, அமைதிக்குறைவு. |
| கன்னி | சிந்தனை மிகுதி, போசன சுகம், நல்ல முயற்சி, தெய்வ தரிசனம். |
| துலாம் | தொழில் முயற்சி, இடமாற்றம், சயன சுகக்குறைவு, சுர வியாதி. |
| விருச்சிகம் | பெருமையடைதல், தெய்வ சிந்தை, சகோதரர் வழி நன்மை, பொருள்சேர்க்கை. |
| தனுசு | அதிக பிரயாசை, புதிய திருப்பம், நல்ல தகவல், மேன்மை. |
| மகரம் | கட்டுப்பாடு, சரீரப்பிரயாசை, பிரயாணம், பெரியோர் வார்த்தை. |
| கும்பம் | மனக்கவலை, காரியதாமதம், வாகன பயம், போசன சுகம். |
| மீனம் | காரிய நன்மை, நல்ல வரவேற்பு, தெய்வ சிந்தை, போசன சுகம். |

**பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது**

**-வளவன்**

## 'குவலயத்தோர் போற்றிடும் தேவி'

**சங்கரத்தைப்பதியுறையும் தேவி**
**சஞ்சலம் நீக்கிடும் தேவி**
**எங்கும் புகழ் பெற்றிலங்கும் தேவி**
**எழிலாயமர்ந்துறையும் தேவி**
**பொங்கி ஆடும் நல் அரவத்தோடும்**
**புன்னகையோடுறையும் தேவி**
**குங்குமம் அணிந்த அழகான நற்தேவி**
**குவலயத்தோர் போற்றிடும் தேவ்வி**

சங்கரத்தையூர் **சபாநாதன்**

இன்று வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதி ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலய இரதோற்சவத்தை முன்னிட்டு இக் கவிதை பிரசுரமாகிறது.





**வண்ணை வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தான இரதோற்சவப் பெருவிழா நேற்று இடம்பெற்றது. வைத்தீஸ்வர சுவாமி தேரேறி வீதி வலம் வருவதையும், பெருமளவு பக்தர்கள் சுவாமியை தரிசிப்பதையும் படத்தில் காணலாம். (படங்கள்:திலீப்)**

## சிறைச்சாலை ஆணையாளர் மீதுவிசாரணை நடத்துமாறு கொழும்பு நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து தண்டனைக் கைதியொருவர் தப்பிச் செல்வதற்கு சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் ரூமி மர்சூக் ஒத்துழைப்பு வழங்கினாரா? என்பது குறித்து விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கொழும்பு நீதிமன்றம் நேற்று சி.ஐ.டி.க்கு உத்தரவிட்டுள்ளது.

24 லட்சம் ரூபா மோசடி தொடர்பாக 4 வருட கடூழிய சிறைத் தண்டனை கடந்த ஜனவரி மாதம் சென ரத் பண்டா ரணசிங்க என்பவருக்கு விதிக்கப்பட்டிருந்தது.

கடூழிய சிறைத் தண்டனைக் கைதியான இவருக்கு சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தின் உத்தரவிற்கு அமைய சலுகைகள் வழங்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஜனவரி மாதம தண்டனைக் கைதியாக சிறைச்சாலைக்கு கொண்டுவரப்பட்ட இவர் மேமாதம் 13ஆம் திகதி சிறைசசாலை தலைமையகம் முன்பாக வெசாக் அலங்காரத்தில் ஏனைய கைதிகளுடன் ஈடுபட்டிருந்த சமயம் தப்பியோடினார்.

சிறைச்சாலையில் இவர் வைக்கப்பட்டிருந்த இந்த 5 மாத காலத்திற்குள் 42 தடவைகள் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கைகளில் விலங்கிடப்படாமல் சிறைச்சாலை தலைமையகத்திற்குள் பல தடவைகள் அழைத்துச் செல்லப்பட்டு நீண்டநேரம் வரை ஆணையாளர் நாயகத்துடன் உரையாடிவிட்டு திரும்பியுள்ளார்.

இப்படியான சலுகைகள் இந்தக் கைதிக்கு வழங்கப்பட்டுள்ளதால் இவர் தப்பியோடுவதற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆணையாளர் நாயகத்தின் ஒத்துழைப்பு கிடைத்திருக்கலாம் என சி.ஐ.டி.யினர் நேற்று கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம், இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு எதிர்வரும் ஜூலை 21ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவிட்டுள்ளது. (க)

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

## கௌரி குண்டம்

தொடர் இல 45



18.9.61 காலை புறப்பட்டோம். மழையும், வெய்யிலும் மாறி மாறி வந்து எங்களை வாட்டி வதைத்தன. சொர்ண கங்கை வந்து மந்தாகினியில் கூடுகின்றது. இமயமலை லக்ஷம் சிகரங்களை உடையது. ரிஷிகேசத்தை விட்டுப் புறப் பட்டது. முதல் இமயமலைக்குள் தான் நாங்கள் பிரயாணம் புரிந்துகொண்டிருந்தோம். எத்தனையெத்தனை சிகரங்கள்! எத்தனையெத்தனை நதிகள்! அங்கே பசுமை தவழ்ந்து கொண்டிருந்தது. இமயமலையில் பல பகுதிகளில் மக்கள் வசிக்கின்றார்கள். நெல், கோதுமை, கேழ்வரகு, தினை முதலியவை பயிரிட்டுக்கொண்டு வாழ்கிறார்கள்.

இமயத்தில் வாழும் மக்கள் நல்ல ஆற்றல்படைத்தவர்கள். எல்லோருமே நல்ல சிவப்பு நிறம். கள்ளமில்லாத உள்ளம் படைத்தவர்கள். நல்ல உழைப்பாளிகள்.

கௌரி குண்டம் 6000 அடி உயரம். ஒருபுறம் மந்தாகினி ஓடுகின்றது. மற்றொரு புறத்தில் நந்தி வாயிலிருந்து வெந்நீர் சதா வந்து ஒரு சிறிய குளம்போன்ற தொட்டியில் விழுந்த வண்ணமிருக்கின்றது.

மந்தாகினிக்கும், இந்த வெந்நீர் குளத்துக்கும் 15அடி தொலைவுதான். நடந்துவரும் சேய்களின் கால்வலி தீர உலகத்தாய் வெந்நீர் குண்டத்தை அமைத்து வைத்திருக்கின்ற கருணைதான் என்னே! அங்கு உடல்வலி தீர வெந்நீர் குண்டத்தில் குளித்து வழிபாடு செய்தேன். அன்று எனக்கு முதல் உணவு பகல் 2 1/2 மணிக்குத்தான் தேவதாரு மரங்களும், தூப வருஷங்களும் அணி அணியாக நின்று காட்சி அளிக்கின்றன. வித விதமான செடி, கொடிகளும், பல வண்ண மலர்களும் கண்ணுக்கடங்காத காட்சிகளாக இருந்தன. இமயத்தில் இயற்கை எழில் களிநடம் புரிந்து கொண்டிருக்கின்றது. புனிதமான அந்த இமயத்தில் முனிவர் பலர் இருந்து தவம் புரிகின்றார்களாம்.

கௌரிகுண்டத்தை விட்டு மாலை 3 1/2க்கு மீளவும் புறப்பட்டோம். கடும் ஏற்றம். கரடு முரடான வழியில் தள்ளாடித் தள்ளாடி ஏறினோம். வழியில் நீரட்டை கடித்துக் காலில் உதிரம் ஒழுகிற்று. இரவு 7மணிக்கு ராம்பாடா என்ற இடத்தை அடைந்தோம். காலையில் 5 மாலையில் 4 ஆக 9மைல் நடந்தோம். ராம்பாடா 9000அடி உயரம். கடும் குளிர்.

## கேதாரம்

19.9.61 ராம்பாடாவுக்கும், கேதாரத்துக்கும் 3மைல் தான். ஆனால் ஏற்றம் அதிகம். ஒருபுறம் வானளாவிய மலை. மறுபுறம் அதலபாதளத்தில் நதி. குறுகிய வழி. இரண்டு மைல் நடந்து கருடசட்டி என்ற இடத்தை அடைந்தோம். இது 11ஆயிரம் அடி உயரம். பகல் 11.30 மணிக்குக் கேதாரம் என்ற திருத்தலத்தை அடைந்தோம். 3மைல் தூரம் நடக்க 4 1/2 மணி நேரம் ஆயிற்று என்றால் அதன் கடுமையை என்னவென்று இயம்புவது? இதுவரை கண்டமலைகளில் வானளாவிய மரங்கள் அடர்ந்திருந்தன. பின்னர் செடிகள் மட்டுமே அடங்கிய மலைகள் தென்பட்டன. இப்போது புல் மட்டுமே உள்ள மலைகள் காட்சியளித்தன. நிலாப்பிறை போல் ஒரு மலைத்தொடர் வளைந்திருந்தது.

வட திசையிலிருந்த மலை வெள்ளிச் சிகரங்களுடன் இன்பக் காட்சியை நல்கியது. ஒருபுறத்தில் அர்ஜுனப் பெருமான் தவம்புரிந்த இந்திர நீல பர்வதம் இருக்கக் கண்டேன்.

'கங்கை, மது கங்கை, மந்தாகினி, சொக்க துவார கங்கை, சரஸ்வதி என்ற 5நதிகள் ஐந்து புரங்களில் மகா மலைகளிலிருந்து கீழே வந்து ஒன்றுபடுகின்றன. பனிக்கட்டிகள் உருகி வருகின்ற நீராதலால் அதன் குளிர்ச்சி மிகக் கடுமையாக இருந்தது. மந்தாகினியில் முழுகியவுடன் உடம்பு உணர்ச்சியற்றுவிட்டது.

இயற்கையாக அமைந்த சுயம்புலிங்கமாகிய கேதாரநாதரைக் கண்ணாரக்கண்டு சிவலிங்கத்தின் மீது சிரஸைவைத்துத் தொழுதேன்.

கேதாரம் என்ற சொல்லுக்குப் பொருள்.

1. கே-தலை. தாரம்-தரிப்பது. தலையில் கங்கையைத் தரித்து அருள் புரிந்த தலம் கேதாரம்.
2. கே-இந்திரியம். தாரம்-அவைகளை அடக்கி வெல்வது. பொறி புலன்களை வெல்லுந் தலம் கேதாரம்.
3. கே.பிரமரந்திரம்-தாரம்-அதிலிருந்து வடியும் அமிர்ததாரை

## கோயில்

தெற்கு நோக்கிய திருக்கோயில், எதிரில் பெரிய நந்தி இருபுறத்தில் துவாரபாலகர்கள். கோயிலுக்குள் மண்டபத்தில் குந்திதேவி, யுதிஷ்டிரர், பீமசேனன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன், திரௌபதி, கிருஷ்ணர் இவர்களுடைய சில உருவங்கள் இருக்கின்றன. லட்சுமிநாராயணர், உமாதேவியர் திருவுருவங்கள் இருக்கின்றன. அக்கோயிலும் பாண்டவர்கள் புதுக்கியது என்று அர்ச்சகர் கூறினார்.

பாண்டவர்கள் கடைசியில் மகாப்பிரஸ்தானம் என்ற விரதத்தை மேற்கொண்டார்கள். கேதாரம் வந்து பெருமானை வழிபட்டு வடகீழ் திசையிலுள்ள ஒரு மலை வழியாகச் சொர்க்கம் புகுந்தார்கள். அம்மலையையும் பார்த்து மகிழ்ந்தேன்.

மலைத்தொடர்களின் பாதியில் சிவலிங்கத்தின் ஆவுடையார் போன்ற ஒருகாட்சி வியப்பை உண்டாக்கியது. எங்கும் முகில் வந்து சூழ்ந்து கொண்டது. கடல் மட்டத்துக்கு கேதாரம் 11750அடி உயரம் குளிர் நடுக்கியது. பற்கள் தாளமிட்டன. கம்பளிகளைப் போர்த்து ஒடுங்கிக்கொண்டோம்.

20-9-61 காலையில் சம்பந்தரும், சுந்தரரும் பாடியருளிய கேதார திருப்பதிகங்கள் இரண்டையும் பாராயணம் புரிந்து உலக நலன்குறித்து வினைகள் சேதாரமடைய அகில உலகங்களுக்கும் ஆதாரமாகிய கேதாரமூர்த்தியை வழிபட்டோம்.

## பவஹரிபாவா சுவாமிகள்

கேதார திருக்கோயில் தீபாவளியன்று மூடப்படும். பின்னர் அர்ச்சகர் முதல் அங்கு ஒருவரும் வசிப்பதில்லை. கோயில், வீடுகள் எல்லாவற்றையும் பனிக்கட்டி மூடிக்கொள்ளும். ஆனால் இந்த பவஹரிபாவா சுவாமிகள் மட்டும் 360 நாட்களுக்கு அங்கு வசிக்கின்றார்கள். அர்ச்சகராகிய ஜெயகணேச வாஜபேய் என்பவர் அந்த சுவாமிகளை எனக்கு அறிமுகம் செய்வித்து-"இவர் பனி முதலிய இடர்களை வென்றவர். நான் குழந்தையாக இருக்கும் காலம் முதல் இவர் இப்படியே இருக்கினறார்.'' என்று கூறினார்.

நான் அவரை வணங்கி "சுவாமிஜி! பனிக்கட்டி மூடிக்கொள்ளும் காலத்தில் தாங்கள் இங்கு எப்படியிருக்கின்றீர்?'' என்று கேட்டேன். "நான் உப்பரில் இருப்பேன்'' என்றார்,

"தாங்கள் என்ன உண்பீர்?'' எனக் கேட்டேன்.

"நான் எல்லாவற்றையும் உண்பேன்'' என்றார்.

(தொடரும்)

# செலவுகளை ஈடுசெய்வதற்கு தபால் கட்டணத்தில் மாற்றம்?

## கொண்டுவரப்படுமென அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

தபால் திணைக்களம் தனியார் மயப்படுத்தப்பட மாட்டாதென தபால்த்தொலைத் தொடர்பு அமைச்சர் டி.எம்.ஜெயரட்ணா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தபால் திணைக்களத்தின் செலவினங்கள் அதிகரித்துச் செல்வதினாலேயே தனியார் மயப்படுத்தல் தொடர்பாகப் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இந்தச் செலவினத்தை ஈடு செய்யும் வகையில் தபால் கட்டணத்தில் மாற்றங்கள் கொண்டு வரப்படும்.

அதேவேளை தபால்திணைக் களத்தை தனியார் மயப்படுத்துவதை பரிசீலிப்பது தொடர்பாக ஐவரைக் கொண்ட குழுவொன்றை நியமித்திருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (து-8)

# பொதுக்கூட்டம்

பருத்தித்துறை இந்து மகளிர் கல்லூரி அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 3ஆம் திகதி கல்லூரி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

திருமதி எஸ்.சண்முகநாதன் தலைமையில் அன்று காலை 9.00மணிக்கு நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கல்லூரி அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (க-49)


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைதடி சித்த மருத்துவத் துறையில் அமைந்துள்ள கல்விசார் கட்டிடங்கள் புனரமைப்பு கட்டடம் 11 வேலைகளுக்கான அரக்கிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கட்டிட நிர்மாண வேலைகளுக்கான 'இக்ராட்' (ICTAD) நிறுவனத்தில் தரம் 8 அல்லது மேற்பட்ட தரத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கேள்விச்சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிரதிப் பதிவாளர் நிர்வாகம் அவர்களிடமிருந்து 20.04.2005 வரை ஒப்பந்தக்காரர் பதிவுப் புத்தகத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக காசாளர் கரும பீடத்தில் பின்வரும் வைப்பீடுகளுக்கான தொகையைப் பணமாகச் செலுத்திய பற்றுச்சீட்டையும் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

(1) மீளளிக்கப்படும் வைப்புத்தொகை ரூ. 20000.00
(2) மீளளிக்கப்படாத வைப்புத்தொகை ரூ. 500.00

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் சீல் பண்ணப்பட்டு வேலையின் பெயரை உறையின் (என்வலோப்) இடது மூலையில் குறிப்பிட்டு தலைவர் கேள்விச்சபை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் அவர்களிற்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது பல்கலைக்கழகப் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இடப்படல் வேண்டும்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 25.04.2005 அன்று மாலை மூன்று மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு உடனடியாக அன்று மாலை 3.30 மணிக்கு திறக்கப்படும். கேள்விதாரர்களோ அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்டவர்களோ கேள்விப்பத்திரங்கள் திறக்கும்பொழுது பிரசன்னமாயிருக்கமுடியும்.

தேவைப்படின் கேள்விப்பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகக் கிளையில் வழமையான அலுவலக நேரங்களில் கட்டணம் ஏதுமின்றி கேள்விதாரர்கள் பரிசீலிக்க முடியும்.

துணைவேந்தர்
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்.

தபால் பெட்டி இலக்கம் 57
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.

(C/1178)


# "தந்தையே என் ஆவியை உம் கைகளில் ஒப்படைக்கின்றேன்"



## தவக்காலச் சிந்தனை

அவமானத்தின் சின்னமாகிய சிலுவை இயேசுவால் மீட்பின் சின்ன மாகிறது. நமக்கு வாழ்வு தரும் அருளடையாளமாகிறது.

கொலைக் கருவியான சிலுவை வாழ்வு தரும் மரமாகிறது - கிறிஸ்துவின் மரணத்தால் கைவிடப்பட்டவர்களின், அநாதைகளின், நோயாளிகளின் சுமையைத் தாங்க சிலுவை அன்னை தெர சாவுக்கு மாபெரும் சக்தி. தனது பணியின் உந்து சக்தியை சிலுவையின் நிழலில் அன்னை தெரசா பெற்றுக் கொண் டார்கள்.

தொடக்ககாலத் திருச்சபையின் வித்துக்களான வேதசாட்சிகள் இயேசுவின் சிலுவைச் சாவையே தங்கள் கண்முன் கொண்டிருந்தார்கள்.

நமது அன்றாட வாழ்வில் நமக்கு ஏற்படும் துன்பங்களை, நோய் நோக்காடுகளை, வாழ்வின் சிக்கல்களை எதிர்நோக்க சிலுவை நமக்குச் சக்தியாகிறது. "எனக்கு வலுவூட்டுறவரின் துணை கொண்டு எதையும் செய்ய எனக்கு ஆறுதல் உண்டு" (பிலி 4:13) என்று நமது துன்ப துயரங்களை வெல்லுவோம்.

காவலன்

நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு - குறள்

வலம்புரி

# எதிர்க்கட்சிகள் பொறுப்புடன்நடக்குமா?

**நாட்டின் பிரதான எதிர்க்கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சி உள்ளது. எதிர்க்கட்சி என்பது எல்லாவற்றையும் எதிர்க்கும் கட்சியாகவன்றி நல்லவற்றிற்கு ஆதரவும், பிழையானவற்றிற்கு எதிர்ப்பும் தெரிவிப்பதாக இருக்கவேண்டும்.**

**அத்துடன் அரசு விடுகின்ற தவறுகளை - தாம தங்களை மக்களுக்குத் தெளிவுபடுத்துவதும் எதிர்க்கட்சியின் தலையாய கடமையாகும். எதிர்க்கட்சி வரிசையில் இருந்துகொண்டு எதனையும் சாதிக்கமுடியாதென எதிர்க்கட்சி உறுப்பினர் கூறுவாராயின் அவரே இந்நாட்டின் முதலாவது ஜன நாயக விரோதியாவார்.**

**எதிர்க்கட்சியினர் எவ்வளவுதான் கொட்டி முழக்கினாலும் ஆளும்தரப்பின் பெரும்பான்மை பலம் வெற்றிபெறுவது உறுதி. ஆனால் எதிர்க்கட்சியினர் முன்வைத்த வாதப் பிரதிவாதங்கள் மக்கள் மத்தியில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்திவிடும். அந்த மாற்றம் அரசிற்குப் பிரியாவிடை கொடுப்பதாக அமையும்.**

**இங்குதான் எதிர்க்கட்சியின் பலம் தங்கியுள்ளது. எதிர்க்கட்சியில் இருக்கின்றவர்கள் அரசியல் விற்பன்னர்களாக, சிந்தனையாளர்களாக, உலக அறிவில் தேர்ச்சிபெற்றவர்களாக இருக்கின்றபோதே ஆளுந்தரப்பின் கபடநோக்கங்களை அம்பலப் படுத்தமுடியும்.**

**இதனைவிடுத்து வெறும் பாராளுமன்ற உறுப்பினர் என்ற பதவியுடன் ஆசனங்களில் அமர்ந்திருப்பதால் மட்டும் நம்பி வாக்களித்த மக்களுக்கு எந்த நன்மையும் ஏற்படப்போவதில்லை.**

**இலங்கை அரசியலைப் பொறுத்தவரை எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் உளரீதியில் சோர்மானம் உடையவர்களாகவே இருக்கின்றனர். பாராளுமன்ற உறுப்பினர்கள் என்றால் தமது ஆதரவாளர்களுக்கு, உறவினர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கவேண்டும். நிதியுதவிகளைத் தாராளமாகச் செய்யவேண்டும். அப்போதுதான் தனது பதவியை மக்கள் மதிப்பார்களென எண்ணிக்கொள்கின்றனர்.**

**அவர்களின் இந்த எண்ணப்பாடு எதிர்க்கட்சி வரிசையில் அமர்கின்றபோது தோல்விகண்டுவிட கையாலாகாதவர்கள் என எண்ணிவிடுகின்றனர். இந்நிலைமை இலங்கை அரசியலில் வழமையாகிவிட்ட ஓர் பலவீன அம்சமாகும்.**

**உண்மையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்றக் கூட்டத்தொடருக்கு வருகின்றபோது ஆளுந்தரப்பினர் நடுங்கவேண்டும். இவர்களின் கேள்விகளுக்கு எப்படிப் பதிலளிக்கப்போகின்றோம் - நாம் செய்த கபடத்தனத்தை அக்குவேறு ஆணிவேறாக அம்பலப்படுத்தப் போகின்றார்களே எனப் பயப்படவேண்டும். ஆனால் இங்கு நடப்பதோ வேறு. எதிர்க்கட்சியினரைப் பார்த்து ஆளுந்தரப்பினர் ஏளனம் செய்கின்றனர். அவர்கள் கதைக்கின்றபோது கூக்குரலிடுகின்றனர்.**

**எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் எழுந்துநின்று கர்ச்சித்தால் அதனை ஆளுந்தரப்பின் செவிகள் அப்படியே கௌவிக்கொள்ள வேண்டும். நடைமுறை விடயங்களை நன்கு தெரிந்துகொண்ட - அரசியல் சூக்குமங்களை நுண்ணியமாக அறிந்துகொண்ட எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் எழுந்துநின்றால் நிச்சயம் ஆளுந்தரப்பின் கூக்குரல்கள் அடங்கிப்போகும்.**

**இது நிஜம். ஆனால் இந்த நிலைமைதான் நம் நாட்டில் இல்லையே என்ற கவலையின் உச்சத்துடன் தற்போதைய எதிர்க்கட்சிகளாவது தமது பொறுப்புணர்ந்து நடந்துகொள்வார்களா என்பது மக்களின் ஆதங்கமாகவுள்ளது.**

# மாந்தை கிழக்கு அபிவிருத்தியின்மைக்கு பாதைச் சீர்கேடுகளே காரணமாகும்

பல நீண்டகாலமாக புனரமைப்புச் செய்யப்படாத காரணத்தால் துணுக்காய் பூவரசங்குளம் வீதி மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்குச் சேதமடைந்துள்ளது.

சுமார் 50 கி.மீ.நீளமான இவ் வீதியை புனரமைப்புச்செய்து தருமாறு இப்பிரதேச மக்களால் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளருக்கு பலதடவைகள் கோரிக்கை விடப்பட்டது.

இவ் வீதியானது முல்லைத்தீவு மாவட்டத்தையும் வவுனியா மாவட்டத்தையும் இணைக்கும் ஒரு பிரதான வீதியாகும்.

பிரச்சினை நிலவிய கால கட்டத்தில் மக்கள் மாந்தை கிழக்குப் பிரதேசத்திலிருந்து வவுனியாவுக்கும் வவுனியாவிலிருந்து மாந்தைக்கும் பாதுகாப்பாகப் பிரயாணம் செய்ய இவ்வீதி பயன்படுத்தப்பட்டு வந்தது.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான இப்பாதை இன்று மககள் மாத்திரமல்ல கால் நடைகள் கூடச் செல்லமுடியாத அளவுக்குச் சீர்கெட்டிருக்கிறது.

இப்பிரதான வீதியில் பனங்காமம் மூன்று முறிப்பு வீரப்பராயன்குளம், குஞ்சுக்குளம், நல்லி ஆகிய கிராமங்கள் அமைந்துள்ளதால், அக்கிராம மக்கள் தங்கள் அன்றாடத் தேவைகளைப் பூர்த்திசெய்யவும மருந்துத் தேவைக்கும், நட்டான்கண்டல், மல்லாவி போன்ற இடங்களுக்கே செல்லவேண்டும்.

உண்மையில் இன்று இப்பிரதேச மக்கள் மழை காலங்களில் கால்நடையாகச் செல்வதற்கு இப்பாதையைப் பயன்படுத்த முடியாது இருப்பதால் தொடர்புகள் எதுவும் அற்ற ஒரு நிலை ஏற்படலாம் என அஞ்சப்படுகின்றது.

இவ் வீதியானது வவுனியா, பூவரசங்குளத்தில் ஆரம்பித்து மாந்தை கிழக்கு பாண்டியன் குளம் ஊடாக துணுக்காயைச் சென்றடைகின்றது.

யுத்த காலத்தில் "ஏ-9" வீதி தடைப்பட்டிருந்த போது வவுனியாவில் இருந்து வன்னிக்கு உணவு வாகனங்களைக் கொண்டுசெல்ல மிக இலகுவான பாதை இது என தீர்மானிக்கப்பட்டதாலேயே, இப்பாதை செல்லும் மூன்று முறிப்பில் பறங்கி ஆற்றுக்கு மேலால் 35 இலட்சம் ரூபா செலவில் பாலம் ஒன்று அமைககப்பட்டதாயினும் இப்பாதை ஊடாக பொருட்களை ஏற்றிவரும் வாகனங்கள் வருவதற்கு இராணுவம் அனுமதி வழங்கவில்லை.

நீண்டகால கோரிக்கையின் அடிப்படையில் நிக்கொட் நிதி மூலம் கட்டப்பட்ட பாரிய இப்பாலம், தொடர் இராணுவ நடவடிக்கையின் போது 1999ஆம் ஆண்டு தகர்க்கப்பட்டது.

இது இப்பிரதேச மக்களுக்கு ஏற்பட்ட ஒரு பாரிய பின்னடைவாகும். பறங்கி ஆறுதான் முல்லைத்தீவு மாவட்டத்தினதும் மாந்தை கிழக்கு பிரதேசத்தினதும் எல்லையாகக் கருதப்படுகின்றது.

மாந்தை கிழக்குப் பிரதேசம் முல்லைத்தீவு மாவட்டத்தில மிக பின்தங்கிய ஒரு பிரதேசம் ஆகும. ஒரு கிராமம் அபிவிருத்தியடையவேண்டுமானால் முதலில் சீர்செய்யப்படவேண்டியது போக்குவரத்துப் பாதைகளேயாகும்.

அந்தவகையில் இப்பிரதேசம் போக்குவரத்தால் பின்தள்ளப்படுவதற்கு பாதைகளின் சீர்கேடே காரணமாக உள்ளது. இங்கேயுள்ள பாதைகள் சீர்செய்யப்பட்டால் மாத்திரமே இப்பிரதேசம் அபிவிருத்தியடையும். (து-128)

# மீள் குடியமர்வுக் கொடுப்பனவை பெற்றவர்களுக்கு நிவாரணம் நிறுத்தம்

## ஆட்சேபனை தெரிவித்து விவசாய அமைப்புக்கள் அரச அதிபருக்கு மகஜர் அனுப்பிவைப்பு

(தென்மராட்சி)

யாழப்பாண மாவட்டததில் மீள்குடியமர்வுக் கொடுபனவாகிய 25 ஆயிரம் ரூபாவைப் பெற்று பதினைந்து மாதங்களாகிவிட்ட குடும்பங்களுக்கு அரசினால் வழங்கப்பட்டுவந்த இலவச நிவாரணப் பொருட்கள் நிறுத்தப்பட்டமையை ஆட்சேபித்து மாவட்டத்திலிருக்கின்ற பல விவசாய அமைப்புகளும் சமாசங்களும் யாழ்.அரச அதிபருக்கு மகஜர்களை அனுப்பி வைத்துள்ளன.

இந்த நிவாரணப் பொருட்கள் நிறுத்தப்பட்டமையினால் பல விவசாயக் குடும்பங்களும் அவற்றினை நம்பி வாழ்கின்ற விவசாயிகள், கூலித்தொழிலாளர்கள், விதவைகள் மற்றும் கணவன்மார்களால் கைவிடப்பட்ட பெண்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர் எனத் தெரியவருகின்றது.

இதேவேளை, யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு அரசினால் 25ஆயிரம் ரூபா மீள்குடியமர்வுக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும்கூட, விவசாயத்தையும், கூலித்தொழிலையும் நம்பி வாழ்கின்ற குடும்பங்கள் இன்னமும் பொருளாதார நிலையில் மேம்பாடு அடையவில்லை.

இததகைய நிலையில், இலவச நிவாரணப் பொருட்களை நம்பி வாழ்ந்த பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இன்று நிர்க்கதி நிலையில் விடப்பட்டுள்ளனர்.

எனவே, இத்தகைய குடும்பங்களின் வாழ்க்கை நிலையைக் கருத்தில்கொண்டு நிறுத்தப்பட்ட இலவச நிவாரணப் பொருட்களை மீளவும் வழங்க நடவடிக்கை எடுக்கும்படி விவசாய அமைப்புக்கள் அரசாங்க அதிபரிடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதேசமயம் விவசாய அமைப்புக்களின் கோரிக்கைகள் தொடர்பாக யாழ்.அரசாங்க அதிபர் அரசுடன் தொடர்புகொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட இலவச நிவாரணத்தை அரசாங்கம் நிறுத்திக்கொண்டமையைக் கண்டித்து பொது அமைப்புக்கள் பலவும் ஆட்சேபனை தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (க-16)

# ஆழிப்பேரலை அனர்த்தம் தொடர்பாக உருப்படியான வேலைகள் எதுவுமில்லை

(கொழும்பு)

சுனாமி ஆழிப்பேரலையின் பின்னர் மேற்கொள்ளப்படவேண்டிய புனரமைப்புப் பணிகள் தாமதமடைந்துள்ளதாக ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் மனோதித்தவெல தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம இரவு கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

நிதியுதவி வழங்கும் நாடுகளும், உதவி நிறுவனங்களும், இன்னமும், தமது திட்டங்கள் குறித்து பேச்சுவார்த்தைகளை நடாத்திக்கொண்டிருக்கின்றனவேயன்றி ஆக்கபூர்வமாக எதுவும் நடைபெறவில்லை எனவும் இந்த நிலையில் அரசாங்கம் கடந்த ஜனவரி மாதம் பரிந்துரை செய்த மீள்கட்டுமானத்திட்டத்துக்கு நிதியுதவிசெய்யும் நாடுகள் இன்னமும் அங்கீகாரம் வழங்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஆழிப்பேரலையின் பின்னரான புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக அரசாங்கம் 1.8பில்லியன் டொலர்களைச் செலவிட மதிப்பிட்டுள்ளது. ஆழிப்பேரலை அனர்த்தத்தின் காரணமாக பாதிக்கபபட்ட 5இலட்சம் பேர் அகதிகளாக வாழ்கின்றனர். 40ஆயிரம் போ உயிரிழந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்படட வீடுகளை மீள்கட்டுமானம் செய்ய 9 மாதங்களவரை செல்லுமெனத் தெரிவித்த அவர் பாதைகளை திருத்தியமைக்க 3 வருடங்கள்வரை செல்லுமெனவும் தெரிவித்தார். (து-04)

# அரசியல் அமைப்புச் சபையின் ஆயுட்காலம் முடிவடைந்தது

(கொழும்பு)

அரசியல் அமைப்புச்சபையின் ஆயுட்காலம் நேற்று முன்தினம் முடிவடைந்தது.

அரசியல் அமைப்புச்சபை மூன்று வருடகால ஆயுளைக் கொண்டது. இதில் பிரதமரும், எதிர்க்கட்சித்தலைவரும் சபாநாயகரும் முக்கிய மூன்று உறுப்பினர்களாகவிருக்கின்றனர். அத்துடன் அவர்கள் மூவரும் ஆலோசனை மேற்கொண்டு 5உறுப்பினர்களை நிமியக்கக்கூடிய உரிமைகளைக் கொண்டுள்ளனர்.

அதேநேரம் ஜனாதிபதி ஒரு உறுப்பினரை இந்த சபைக்கு நியமிக்கலாம். இதற்கு மேலதிகமாக சிறுபான்மைக் கட்சிகள் ஒரு உறுப்பினரை பரிந்துரை செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-4)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

**இந்த உலகில் உள்ள நன்மை மற்றும் தீமையின் மொத்த அளவைப் பாருங்கள் ஏதாவது மாறறம் உள்ளதா? பனனெடுங காலம கழிந்து விட் டது. செயல்முறை மதமும் பனனெடும் காலமாக இருந்து வருகிறது ஒவ்வொரு முறையும் பிரச்சினைக்கு தீாவு கிடைத்துவிடும் என்று உலகம் நினைததது. ஆனால் அதே பிரச்சினை தான் இன்றும உள்ளது அதன் உருவம் வேண்டுமானால் மாறலாம். அதை ஓரிடத்தில் இருந்து விரட்டுங்கள். மற்றோர் இடத்திற்கு போகிறது.**

**சுவாமி விவேகானந்தர்**

# காணாமல் போனோர் தொடர்பான விசாரணை

## முறைப்பாட்டாளர்களை நேரில் ஆஜராக வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் 1996, 1997ம் ஆண்டு காலப்பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமல்போனதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ள கீழ்க்காணும் நபர்கள் சமபந்தமாக குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தின் காணாமல்போனோர் சம்பந்தமான விசாரணைபிரிவினரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்விசாரணைக்காக கொழும்பில் இருந்து காணாமல் போனோர் சம்பந்தமான விசாரணைப்பிரிவினர் எதிர்வரும் 29ம் திகதி யாழ்.வரவுள்ளனர்.

கீழ் குறிப்பிடப்படும் பெயரையுடைய காணாமல் போனோரின் பெற்றோர், பாதுகாவலர், முறைப்பாட்டுக்காரர் இவர்களில் எவரேனும் இடம்பெயர்ந்து அல்லது வெளிநாட்டில் வசிப்பவராயினும் அவர்களது உறவினர் 3-4-2005ம் திகதி முற்பகல் 9மணிக்கு யாழ்.பொலிஸ்நிலையத்திற்கு உரிய ஆவணங்களுடன் வருமாறு அழைக்கப்படுகிறார்கள்.

செல்லையா கந்தசாமி அளவெட்டி, (கோ.இல.73), கந்தையா ராஜரத்தினம் குலதாஸ் வரணி,(கோ.இல.209), பரமசாமி சசீகரன் தனங்கிளப்பு, (கோ.இல.365),ரத்னபாலன் கணேஸ்வரன் மூளாய்,(கோ.இல 444),

சதாசிவம் விக்னேஸ்வரன் கைது செய்யப்பட்ட இடம் சாவகச்சேரி, (கோ.இல 492), செலவநாயகம் தனபாலசிங்கம் கைது செய்யப்பட்ட இடம் அரியாலை,(கோ.இல 524), சின்னத்தம்பி லக்சுமிகாந்தன் கைது செய்யப்பட்ட இடம் வரணி(கோ.இல.564) சிதம்பரப்பிள்ளை கிருபாகரன் கைது செய்யப்பட்ட இடம் தனங்கிளப்பு (கோ. இல. 589), துரைமகாலிங்கம் கைதுசெய்யப்பட்ட இடம் கிளாலி கொடிகாமம்(கோ.இல.705) விஜேகுமார் சுதமாலா ்கைதுசெய்யப்பட்ட இடம் நுணாவில்கோவில் (கோ.இல.753),

. வினா சித்தம்பி கோணேஸ்வரன் கைதுசெய்யப்பட்ட இடம் அரியாலை முறைப்பாட்டுக்காரர் விஜயராஜா, சிவலிங்கம் சசீகரன் இல. 687/24 ஓட்டுமடம் வீதி யாழ்ப்பாணம் கோ.இல.596 முறைப்பாட்டுக்காரர் திருமதி சசீகரன் மனைவி, C.பாலசிங்கம் கைதடி நுணாவில் சாவகச்சேரி (கோ.இல.65,) S. சிவாதரி ஏழாலை மேற்கு ஏழாலை (கோ.இல 466,) S.செல்வரஞ்சன் இல.25/7 கோபால் வீதி ஓட்டுமடம் யாழ்ப்பாணம் (கோ.இல. 471)

(க)

# மிதி வெடிகளை அகற்றுவதற்கு ஜப்பான் 1.8 மில்.டொலர் உதவி

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் யுத்த காலத்தில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்றுவதற்காக ஜப்பான் மேலும் 1.8 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க முன்வந்துள்ளது.

இதற்கான ஒப்பந்தம் நேற்றுமுன்தினம் கொழும்பில் நிதியமைச்சிற்கும் இலங்கைக்கான ஜப்பானிய தூதரகத்திற்கு மிடையில் செய்துகொள்ளப்பட்டது.

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள 640 கிராமங்களில் 1.5 மில்லியன் மிதி வெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டிற்குள் முழுமையாக இவை அகற்றப்பட வேண்டும் என்ற இலக்கை அடைவதற்காக ஜப்பான் இந்த உதவியை வழங்க முன்வந்துள்ளது.

இந்நடவடிக்கைக்காக ஏற்கனவே ஜப்பானால் ஐந்து மில்லியன் அமெரிக்க டொலர் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ச)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் இலக்கியப் பகிர்வு கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு ஒன்றிய மண்டபத்தில் செம்பியன் செல்வன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் 'தற்காலக் கவிதையின் போக்கு' பற்றி ந.சத்தியபாலன் கருத்துரை வழங்கவுள்ளார். (க-9)

## காயத்திரி யாகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருநெல்வேலி காயத்திரி காமகோடி பீடத்தில் சித்தாருத பூரணை தினமான இன்று காலை 7.30மணிக்கு கும்பபூசையும் முற்பகல் 11மணிக்கு விசேட அபிஷேகமும் பிற்பகல் 3மணிதொடக்கம் இரவு 9 மணிவரை நவாவரண பூசையும் இடம்பெறவுள்ளது.

இந்தியாவில் இருந்து வந்துள்ள வேலூர் இராஜராஜேஸ்வரி ஆச்சிரம மாதாஜீ சிறிவித்தியா அம்பாள் சரஸ்வதி இவ்யாகத்தை நடத்தவுள்ளார்.

(8)

## படையினரின் சடலங்கள் நாளை எடுத்துவரப்படும்

(கொழும்பு)

ஹெயிட்டியில் உயிரிழந்த இலங்கைக் படையினர் இருவரினதும் உடல்கள் நாளை இலங்கைக்கு கொண்டுவரப்படவுள்ளன.

ஹெயிட்டியில் ஐ.நா. படையுடன் இணைந்து பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் கட்ந்த 20 ஆம் திகதி போராளிகளுக்கும் அமைதி காக் கும் படையினருக்குமிடையில் இடம்பெற்ற மோதலில் ஒரு படையினர் உயிரிழந்தார்.

மற்றொரு படைவீரர் கடந்த செவ்வாய்க்கிழமை கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக கட்டடத்தின் மேல் ஏறி நின்றபோது அந்த கட்டடம் இடிந்து விழுந்ததில் மற்றைய வீரரும் உயிரிழந்தார்.

இவர்கள் இருவரினதும் சடலங்களே நாளை இலங்கைக்கு கொண்டுவரப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஹெயிட்டியில் அமைதிகாக்கும் ஐக்கிய நாடுகள் அமைதிகாக்கும் படையில் அண்மையில் தான் இலங்கைப்படையினர் சென்றமை குறிப்பிடத்தக்கது.

(08)

## முதியோர் இல்லத்தில் பூரணை விழா

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரமம் நடாத்தும் பங்குனி பூரணை தினவிழா இன்று காலை 9மணிக்கு கைதடி முதியோர் இல்லத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பஜனை, சிறப்புரை,தீபாராதனை, கண்காட்சி என்பன இடம்பெறவுள்ளதாக ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரம யாழ்ப்பாண இணைப்பாளர் எஸ்.சிவமோகன தெரிவித்துள்ளார். (8)

## பருத்தித்துறையில் போராட்டம்

(திருநெல்வேலி)

பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் முன்பாக வடமராட்சி மக்கள் நேற்றுக் காலை 10 மணிக்கு போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

நிவாரணம் வழங்கப்படாமையைக் கண்டித்தே இப்போராட்டம் நடாத்தப்பட்டது. பருத்தித்துறை உதவி அரசஅதிபர் சம்பவ இடத்திற்குச் சென்று நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கை எடுப்பதாக கூறினார்.

இதனையடுத்து குறிப்பிட்ட காலத்திற்குள்நிவாரணம் வழங்கப்பட வேண்டு மென மக்கள் காலக்கெடுவிதித்து போராட்டத்தைக்கைவிட்டனர். (ச-43)

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சரஸ்வதி கலையரங்கத்தின் திறப்பு விழா இன்று பிற்பகல் 4மணிக்கு அதிபர் துரைஎங்கரசு தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக்கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் சிறப்புவிருந்தினர்களாக முன்னாள் வடமாநில கல்விப்பணிப்பாளர் இரா.சுந்தரலிங்கம், யாழ்பல்கலைக்கழக கல்வியியல் துறைப்பேராசிரியர் சபா.ஜெயராசா மற்றும் இலண்டன் பழையமாணவர் சோ.சிறிஸ்கந்தராசா, யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்டவிரிவுரையாளர் இ.விக்னேஸ்வரன், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி உபஅதிபர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன், யாழ்.மக்கள்வங்கி வடபிராந்திய உதவி முகாமையாளர் அ.குகதாஸ் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

கௌரவ விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறைத்தலைவர் க. தேவராசா மற்றும் உடுவில் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் செ.குபேரநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளார்கள்.(க.9.49)

## ஆன்மீக நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பகவான் ஸ்ரீசத்திய சாயிசேவா நிலையத்தில் இன்று போயா நிகழ்ச்சிகள் அதிகாலை 5மணிக்கு நகரசங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவுபெறும். (க)

## ஞானச்சுடர்வெளியீடு

(மருதங்கேணி)

தொண்டமனாறு சந்நியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவையினர் வெள்ளிக்கிழமை தோறும் நடாத்திவரும் வாராந்த நிகழ்வில் இன்று மு.ப.10.30 மணிக்கு பங்குனி மாத ஞானச்சுடர் நூல் வெளியிடப்படவுள்ளது. (க.35)

---

## கருணாவின்...

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, போர்நிறுத்த உடன்படிக்கையின் 18வது பிரிவின்படி வடகிழக்கில் ஆயுதக்குழுக்களின் நடமாட்டம் தடைசெய்யப்பட்டுள்ளது.

கிழக்கில் இடம்பெற்று வரும்வன்முறைகளின்போது ஆயுதக்குழுக்களுடன் இணைந்து செயற்பட்டு வருவதாக இலங்கை அரசின் மேல் ஒருகுற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. புலிகளுக்கும் அரசுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையின் பின் மிகமோசமான மனிதஉரிமைமீறல்களாக கிழக்கில் இடம்பெறும் படுகொலைச்சம்பவங்களே திகழ்கின்றன.

சிலசம்பவங்கள் வடக்கிலும் கொழும்பிலும் நடைபெற்று வந்தாலும் இவற்றில் பெரும்பாலானவை கிழக்கிலேயே இடம் பெற்றுள்ளது.

இவை ஒருவரையே குறிவைத்து நடத்தப்பட்டாலும் அவை இடம்பெற்ற பிரதேசத்தில் அச்சநிலைமையை தோற்றிவித்திருக்கின்றன. இவற்றில் பெரும்பாலானவை புலிகளுக்கு எதிராக செயற்படுபவர் மீதே இடம்பெற்றுள்ளன.

ஒரு வருடத்திற்கு முன் புலிகளிடம் இருந்து பிரிந்து கருணாதரப்பினர் சென்ற உடனேயே இவை பெரும்பாலும் அதிகரித்து காணப்படுகின்றன இவை தொடர அனுமதித்தால் அவைபாதகமான நிலைமையையே தோற்றுவிக்கும்.

புலிகளிடம் இருந்து கருணாதரப்பினர் வெளியேறியவுடன் அரசாங்கம் கருணா தரப்பினருக்கு தேவையான உதவிகளை செய்து வருவதாக விடுதலைப்புலிகள் முறையிட்டுள்ளனர். ஒருவருடமாக கருணா அணியை சேர்ந்தவர்கள் என நம்பப்படுகின்ற ஆயுதம்தாங்கியவர்கள் புலிகளைத் தொடர்ந்து தாக்கி வருகின்றனர்.

இக்குற்றச்சாட்டுகள் தொடர்ந்தும் அரசாங்கத்தால் மறுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் தற்போது பத்திரிகைத் துறையினர் வடக்கு கிழக்கு எல்லைப்பகுதியில் அரச கட்டுப்பாட்டுப்பிரதேசத்திற்குள் சிறுவர்கள் உட்பட கருணா தரப்பினர் முகாம் இட்டுள்ளனர் என விசாரித்து கண்டறிந்துள்ளனர்.

எனவே கருணா குழுவினரை தொடர்ந்து அனுமதித்தால் அது அரசாங்கத்தின் மனித உரிமைகள் சட்டம் ஒழுங்குதொடர்பாக உள்ளமதிப்பினையும் சமாதான நம்பிக்கையினையும் குறைத்துவிடும்.

எனவே கருணா தரப்பினருக்கு ஆதரவு வழங்குவது எனச்சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை உடனடியாக மறுப்பதுடன் இத்தகைய முகாம்கள் எதுவும் அங்கு இல்லை என உறுதிப்படுத்துமாறும் அரசாங்கத்தை சமாதானப் பேரவை கேட்டுள்ளது.

அத்துடன் மக்கள் நலனைப்பாதுகாக்கும் அரசியல் கட்சிகளோ சமூகஅமைப்புகளோ சர்வதேச சமூகமோ அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் சர்வதேசரீதியில் அங்கீகரிக்கப்பட்ட மனிதஉரிமைகளை பின்பற்றுகிறார்களா என்பதை உறுதிசெய்தல் வேண்டும்.

தற்போது பொதுக்கட்டமைப்புகள் உருவாக்கப்படுவதிலேயே முழுக்கவனமும் செலுத்தப்படுகிறது. எனவே மனித உரிமை மீது செலுத்தப்படும் அக்கறை ஆனதுசமாதானத்திற்கான படிக்கல்லாகவே அமையும் என சமாதான பேரவையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ச)

---

## நோர்வே...

தொடர்ந்து கிண்ணியா பிரதேசத்திற் குச் சென்று அங்கு பைசல்நகர் கிராமத்தில் அமைக்கப்பட்டு வரும் 117 வீடுகளின் திட்டத்தையும் பார்வையிடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

---

## உண்ணாவிரதமிருந்த...

இந்த நிலையில் தேரர் உண்ணாவிரதமிருந்த இடத்திலிருந்து எழுந்திருக்க மறுத்துவிட்டார். இதனையடுத்து அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, மேல்மாகாண சபை முதலமைச்சர் றெஜினோல்ட் கூரே ஆகியோர் போராட்ட இடத்திற்குச் சென்று உறுதிமொழியை வழங்கியதை அடுத்து தேரர் தனது போராட்டத்தை முழுமையாக நிறைவு செய்தார்.

அதேவேளை, நேற்று திருகோணமலையில் வடக்கு கிழக்கு சிங்கள அமைப்பு ஹர்த்தாலை அனுஷ்டித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ச-8)

---

## புளியங்குளத்தில்...

தடம்புரண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சுமார் நூற்றிற்கும் மேற்பட்ட பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்ற மேற்படி பஸ் தடம்புரண்டு தலைகீழாக காணப்பட்டது.

உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்த தமிழீழ காவற்துறையினர் மக்களின் உதவியுடன் பஸ்ஸினுள் அகப்பட்டவர்களை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். காயமடைந்த 15 பேரும் சிகிச்சைக்காக வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(ச-246)

---

## முஸ்லிம்...

ஹசன் அலி தெரிவித்தார். சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசின் அரசியல் அதி உயர்பீடக் கூட்டம் நேற்று முன்தினமிரவு கொழும்பில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்து கொண்டு விளக்கமளிக்குமாறு மூவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும் அவர்கள் அக்கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

நாடாளுமன்ற குழுக்கூட்ட அறிக்கைகள், பரிமாறப்பட்ட கடிதங்கள் ஆகியவற்றை நீண்டநேரம் ஆராய்ந்த கட்சியின் உயர்பீடம் இறுதியில் அம் மூவரையும் கட்சியிலிருந்து நீக்குவது என முடிவெடுத்ததாக ஹசன் அலி தெரிவித்தார். (ச-8)

---

## பயங்கரவாதச்...

எதிரியை விடுதலை செய்வதாக நீதிபதி தீர்ப்புக் கூறினார்.

எதிரியின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கே. பூபாலசிங்கம் ஆஜராகி வாதாடினார். சட்டமா அதிபரின் சார்பில் அரசசட்டவாதி அசாட்நவாவி ஆஜராகி வாதாடினார். (க)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.03.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.